ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2511 - 2026 ඔක්තෝබර් මස 16 වැනි සිකුරාදා - 2026.10.16

2511 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்		பக்கம்
பதவிகள் - வெற்றிடம்	3560	பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்	3601

கவனிக்க .- (I) சமுதாயஞ்சார் சீர்திருத்தம் (திருத்தம்) சட்டமூலம் 2026.10.09ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(II) நம்பிக்ககைப் பொறுப்புக்கள் (திருத்தம்) சட்டமூலம் 2026.10.09ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

பிரசன்ன ஜயரத்ன,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்த்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட அனைத்து வர்த்தமானி அறிவித்தல்களிலும் "பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகளும் அறிவுறுத்தல்களும்" என்னும் தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட விதிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களின் தொகுதி இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், இதன் பின்னர் நடைமுறையில் இருப்பவை இவ்வர்த்தமானி அறிவித்தலில் தொடங்கி, இனிவரும் காலங்களில் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலகளில் பிரசுரிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் அறிவுத்தல்களின் தொகுதியாகும்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது விளாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. சௌன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமமும் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாளில் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக பொலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாக்கக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அகத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுவலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பகும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். விளாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு விளாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

பதவிகள் - வெற்றிடம்

தொழில் திணைக்களத்தின்

ஆரம்ப நிலை பகுதியளவிலான தேர்ச்சிச் சேவை வகுதியைச் சேர்ந்த குழாய் பொருத்துநர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரல் - 2026

தொழில் திணைக்களத்தில் வெற்றிடமாகக் காணப்படும் ஆரம்ப நிலை பகுதியளவிலான தேர்ச்சிச் சேவை வகுதியைச் சேர்ந்த குழாய் பொருத்துநர் பதவிக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் ஏற்பாடுகளுக்கு அமைய திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதியில், அதாவது 2026.11.16 ஆம் திகதியன்று பின்வரும் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. 1.1 ஆட்சேர்த்துக்கொள்ள எதிர்பார்க்கப்படும் பதவிகளும் வெற்றிடங்களின் எண்ணிக்கையும்

தொடர் இலக்கம்	பதவிப் பெயர்	வெற்றிடங்களின் எண்ணிக்கை
01	குழாய் பொருத்துநர்	01

1.2 பதவிக்கான கடமையின் தன்மை

தொடர் இலக்கம்	பதவிப் பெயர்	கடமைகள்
01	குழாய் பொருத்துநர்	– தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் உள்ள நீர்க் குழாய் மற்றும் கழிவு நீர் முறைமை என்பவற்றுக்கான பராமரிப்புப் பணிகள் – புதிய நீர்க் குழாய் இணைப்புப் பணிகள் – துப்பரவேற்பாட்டு மற்றும் ஏனைய உபகரணங்களைப் புனரமைத்தல் – திணைக்களத் தலைவரால் பதவிக்கு ஏற்புடையதாக ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்

02. ஆட்சேர்ப்பு முறை:

அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் தொழிற்திறன் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர். தொழிற்திறன் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவதுடன், தொழிற்திறன் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை வரிசை மற்றும் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

03. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்:

3.1. கல்வித் தகைமைகள் - கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

3.2. தொழில்சார் தகைமைகள் - குழாய் பொருத்துநர் துறையில் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டம் 2 அல்லது 3 இற்குக் குறையாத பாடநெறியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

3.3. அனுபவம் - சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அதனைச் சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

3.4. உடற்றகைமை - ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்று நிறைவேற்றுவதற்கும் சகல விதத்திலும் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

3.5. ஏனைய தகைமைகள்:

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. சிறந்த நன்னடத்தையைக் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.6. வயதெல்லை:

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று ஆகக் குறைந்த வயது 18 இற்குக் குறையாமலும், ஆகக்கூடிய வயது 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிப்பவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.)

4. **சம்பள அளவுத்திட்டம்:**

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் சம்பளச் சுற்றறிக்கைக்கு இணங்க PL-2-2025 சம்பளத் தொகுதியின் பிரகாரம் இப்பதவிக்கு ரூ. 41,800 - 10X490 - 10X540 - 10X590 - 12X630 - ரூ. 65,560/- ஆன மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

5. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

5.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். மேலும், நீங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் நீங்கள் அதற்கான பங்களிப்புப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

5.2 இந்த நியமனமானது மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

5.3 III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னர் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.4 அரசகரும மொழித் தேர்ச்சி பெறுவது தொடர்பில் 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இன் ஏற்பாடுகளும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளும் இதற்குப் பொருந்தும்.

5.5 அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், அவற்றில் செய்யப்படும் திருத்தங்களுக்கும், ஏனைய திணைக்களக் கட்டளைகளுக்கும், 2013.04.18 ஆம் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அவ்வாட்சேர்ப்புத் திட்டத்தில் இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

6. **6.1 தொழிற்திறன் பரீட்சை -**

பாடத்திட்டம்	அதிகூடிய புள்ளிகள்	சித்தியடைவதற்கான புள்ளிகள்
– T அல்லது L இணைப்புகளை அமைத்தல் – Valve joint அமைத்தல் – குழாய்வாய்களை (Tap) நிறுவுதல் – ஒவ்வொரு பணிகளுக்குமான திருத்த வேலைகளுக்குத் தேவையான மூல-ப்பொருட்கள் மற்றும் பொருட்களின் பட்டியலைப் பெற்றுக்கொள்ளல்	100	40%

6.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

பரிசோதித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்	அதிகூடிய புள்ளிகள்	சித்தியடைவதற்கான புள்ளிகள்
மேலதிக கல்வித் தகைமைகள்	25	
மேலதிக தொழில்சார் தகைமைகள்	30	
மேலதிக அனுபவம்	40	ஏற்புடையதாகாது
நேர்முகப் பரீட்சையின்போது வெளிப்படுத்தப்பட்ட திறமை	05	
மொத்தம்	100	

7. **பரீட்சைக் கட்டணம்:**

இப் பரீட்சைக்கான கட்டணம் ரூ. 250/- ஆகும். உரிய பரீட்சைக் கட்டணத்தை மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையின் 086100169026274 ஆம் இலக்கக் கணக்கிற்கு வரவுவைத்து, அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை கழன்று விடாதவாறு விண்ணப்பத்துடன் ஒட்டி அனுப்ப வேண்டும்.

(இப்பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றினை விண்ணப்பதாரி தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.)

குறிப்பு: பரீட்சை இரத்துச் செய்யப்பட்டால் ஒழிய, பரீட்சைக் கட்டணம் எந்தக் காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படமாட்டாது. இப் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை வேறொரு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது.

8. **விண்ணப்பிக்கும் முறை:**

8.1 இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை 22x29 செ.மீ. அளவிலான A4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி;

அ) இலக்கம் 01 முதல் 07 வரையிலான பந்திகளை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 08 முதல் 11 வரையிலான பந்திகளை இரண்டாம் பக்கத்திலும் இலக்கம் 12 முதல் 14 வரையிலான பந்திகளை மூன்றாம் பக்கத்திலும் மீதியினை மற்றைய பக்கத்திலும் அமையும் வகையில் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், சம்பந்தப்பட்ட தகவல்களைத் தமது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

ஆ) விண்ணப்பத்தைத் தயாரிக்கும்போது, அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள / தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் சிங்களத்திற்கும் தமிழுக்கும் மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். உரிய மாதிரி வடிவத்திற்குப் பொருந்தாத, உரிய திகதியில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத முழுமையற்ற நிலையிலுள்ள விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பத்தின் நிழற்பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும் என்பதுடன், பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பமானது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரர்களால் ஆராய்ந்து பார்க்கப்படுதல் வேண்டும். அவ்வாறில்லாவிடின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

8.2 விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய விதம்:

விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “ஆரம்ப நிலை பகுதியளவிலான தேர்ச்சிச் சேவை வகுதியைச் சேர்ந்த குழாய் பொருத்துநர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரல் -2026” எனக் குறிப்பிடுதல் வேண்டும். தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் அல்லது தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறப்படமாட்டாது.

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026.11.16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகப் பின்வரும் முகவரிக்குப் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

தொழில் ஆணையாளர் (தாபனம்)
தொழில் திணைக்களம்,

08 ஆம் மாடி,
“மெஹவர பியெச" கட்டிடம்,
கொழும்பு 05.

8.3 பரீட்சார்த்தியின் கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் ஆணையிடும் அதிகாரி, அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விஹாராதிபதி அல்லது நாயக்க தேரர் அல்லது ஏனைய மதகுருமார் மத்தியில் குறிப்பிடத்தக்க பதவி அந்தஸ்தைக் கொண்டுள்ள ஒருவரைக் கொண்டு சான்றுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

9. **போலியான தகவல்களுக்கான தண்டனை:**

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் அவதானத்துடன் துல்லியமான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்டவிதிகளுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனக் காணப்பட்டால், பரீட்சைக்கு முன்னதாக அல்லது பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்திநிலை இரத்துச் செய்யப்படும். நியமனம் பெற்றதன் பின்னரும்கூட உண்மைக்குப் புறம்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அல்லது உண்மையான தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டால், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

10. பரீட்சார்த்தியின் அடையாளம்:

தொழிற்திறன் பரீட்சை / நேர்முகப் பரீட்சை வேளையில் பரீட்சார்த்திகள் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன்பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:

I. தேசிய ஆளடையாள அட்டை

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

III. செல்லுபடியாகும் இலங்கைக்குரிய சாரதி அனுமதிப்பத்திரம்

11. இப் பரீட்சையை நடாத்துதல், நியமனங்களை வழங்குதல் மற்றும் ஏனைய சகல விடயங்களும் குறித்த இறுதித் தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் தொழில் ஆணையாளர் நாயகம் அவர்களுக்கே உரியதாகும்.

12. இவ்வறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய உரைகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

தொழில் ஆணையாளர் நாயகம்
2026.10.02

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

தொழில் திணைக்களத்தின்
ஆரம்ப நிலை பகுதியளவிலான தேர்ச்சிச் சேவை வகுதியைச் சேர்ந்த குழாய் பொருத்துநர் பதவிக்கு
ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரல் - 2026

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்
சிங்களம் 2
தமிழ் 3 ☐
ஆங்கிலம் 4
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)
விண்ணப்பமானது பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

02. தனிப்பட்ட தகவல்கள்
2.1 முதலெழுத்துக்கள் பின்னால் அமையுமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் : .....
.....
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) உதாரணம் (PERERA H.A.L.S)
2.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) .....
.....
2.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) .....
.....

03. முகவரி
3.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)
.....
.....
3.3 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) .....
.....

04. பால் : (ஆண் - 0, பெண் - 1) ☐
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

07. திருமண அந்தஸ்து : (திருமணமாகாதவர் -1 , திருமணமானவர் - 2) ☐
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

08. 8.1 பிறந்த திகதி : வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8.2 2026.11.16 ஆந் திகதியில் வயது : வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

09. கல்வித் தகைமைகள்:

09.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை : (முதலாம் அமர்வு)
i. பரீட்சையின் ஆண்டு மற்றும் மாதம் : .....
ii. சுட்டெண் : .....

பாடம்	*சித்தி*	*பாடம்*	*சித்தி*
1.		6.	
2.		7.	
3.		8.	
4.		9.	
5.		10.	

09.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை: (இரண்டாம் அமர்வு)
i. பரீட்சையின் ஆண்டு மற்றும் மாதம்: .....
ii. சுட்டெண் : .....

பாடம்	*சித்தி*	*பாடம்*	*சித்தி*
1.		6.	
2.		7.	
3.		8.	
4.		9.	
5.		10.	

10. தொழில்சார் தகைமைகள் :

பாடநெறியின் பெயர்	*காலப் பகுதி*	*NVQ மட்டம்*	*நிறுவனம்*

11. அனுபவம் :

பயிற்சி பெற்ற அல்லது சேவை செய்த நிறுவனத்தின் பெயர்	*காலப் பகுதி*

12. ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீங்கள் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளீர்களா? (உரிய பெட்டியில் (√) அடையாளத்தை இடவும்)

ஆம்		**இல்லை**	

அவ்வாறு தண்டனை பெறப்பட்டிருப்பின், அது எத்தகைய குற்றத்திற்காக, எந்த நீதிமன்றத்தினால், என்ன தண்டனை வழங்கப்பட்டது என்ற விவரங்களை வழங்குக.

.....
.....

13. பரீட்சைக் கட்டணம் செலுத்தல் :
13.1 செலுத்தப்பட்ட தொகை : .....
13.2 செலுத்தப்பட்ட வங்கி : .....
13.3 செலுத்திய திகதி : .....
13.4 பற்றுச்சீட்டு இலக்கம் : .....

பற்றுச்சீட்டினை அதன் விளிம்பிலிருந்து கழன்று செல்லாதவாறு இங்கே ஒட்டுக.

(பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்)

14. விண்ணப்பதாரரின் சான்றுரை :

(அ) இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரை உண்மையானவை எனவும் சரியானவை எனவும் கௌரவமாக பிரகடனம் செய்கிறேன். இதில் ஏதேனும் ஒரு தகவல் முழுமைப்படுத்தப்படாமையினால் மற்றும்/அல்லது தவறாகப் பூர்த்தி செய்யப்படுவதால் ஏற்படக்கூடிய இழப்பை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகிறேன். மேலும் இதிலுள்ள அனைத்துத் தகவல்களும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும் பிரகடனம் செய்கிறேன்.

(ஆ) பரீட்சையை நடத்துவது தொடர்பில் தொழில் திணைக்களத்தின் தொழில் ஆணையாளரால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு இணங்கச் செயற்படுவதற்கும், இந்த நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவர் என வெளிப்படுத்தப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் பின்னர் எனது அபேட்சகர் நிலை இரத்துச் செய்யப்படுவதற்கு எடுக்கப்படும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதற்கு நான் உடன்படுகிறேன்.

(இ) என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பிரகடனம் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் நியமனம் பெறுவதற்குத் தகைமையற்றவராவேன் என்பதையும், நியமனம் பெற்றதன் பின்னரும் கூட சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

திகதி : ....
விண்ணப்பதாரரின் கையொப்பம்

15. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்:

இந்த விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு.திருமதி/செல்வி.....என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ..... ஆம் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும்அத்தாட்சிப்படுத்துகிறேன்.

.....
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் பெயர்: .....
பதவி:.....
முகவரி: .....
திகதி: .....

10 - 548

திருத்தம்

**இலங்கை நிரந்தர விமானப்படையில்
பயிலிவியல் ஆண்/ பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்**

2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 19ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி எண் 2494 இன் பகுதி I தொகுதி (IIA) இல் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவப்பிரிவு, சட்டத்துறையில் காணப்படும் வெற்றிடங்கள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது மற்றும் துறைக்கான தகைமைகள் மற்றும் தகவல்களில் எவ்வித மாற்றமும் இல்லை என அறிவிக்கப்படுகின்றது.

சேர்க்கை
மருத்துவப்பிரிவு

மயக்க மருந்து நிபுணர் – ஆண்/ பெண் (நிரந்தரம்/ தன்னார்வம்)

(அ) இலங்கை மருத்துவ சபையால் (SLMC) அங்கீகரிக்கப்பட்ட MBBS பட்டம் அல்லது அதற்கு இணையான மருத்துவத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) இலங்கை உள்ள உரிய சட்டபூர்வ அதிகார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட மயக்கவியல் துறையில் முதுகலைப் பட்டத் தகுதி, அதாவது மயக்கவியலில் MD அல்லது அதற்கு இணையான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

(இ) மயக்கவியல் துறையில் தேவையான முதுகலைப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முதுகலை மருத்துவக் கழகம் (PGIM) அல்லது தொடர்புடைய சட்டபூர்வ ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு மருத்துவர் / ஆலோசகர் மருத்துவ அதிகாரி என்ற தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) இலங்கை மருத்துவ சபையில் (SLMC) பதிவு செய்யப்பட்ட இலங்கையில் மருத்துவராகவும் நிபுணராகவும் மருத்துவம் செய்வதற்கான தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

சேர்க்கை
சட்டத்துறை

சட்ட அலுவலர் – ஆண்/பெண் (நிரந்தரம்/ தன்னார்வம்) இலங்கை உச்ச நீதிமன்றத்தின் செயற்குழுவில் உள்ள ஒரு வழக்கறிஞராகவும்

(அ) நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தில் அல்லது உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக வழக்குகளை நடத்தியிருத்தல்

(ஆ) சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் வர்த்தக ஒப்பந்தங்களை வரைவதில் அனுபவத்துடன்,சான்றளிப்பு நோக்கங்களுக்கான ஆவணங்களைத் தயாரித்தல்.

(இ) நிறுவனச் செயலர் பணியில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(வீ பீ எதிரிசிங்ஹ)
WWV, RWP, RSP and three Bars,
USP, fndu (China), psc, qhi
எயார் மாஷல்
விமானப்படை தளபதி.

தலைமையகம்,
இலங்கை விமானப்படை,
பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி,
இல.594, ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டை.

10 - 634/1

இலங்கை நிலையான / தொண்டர் விமானப்படை
விமான வீராங்கனைகள் வெற்றிடங்கள்

1. இலங்கை விமானப்படையின் நிலையான / தொண்டர்ப் படையில் விமான வீராங்கனைகளுக்கான கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றுக்கான குறைந்தபட்ச மற்றும் குறிப்பிட்ட தகுதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அடிப்படை கல்வித் தகுதிகள்

2 (க.பொ.த.) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண (S) தரத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பிட்ட தகுதிகள்

3. தொழில்களுக்கு ஏற்ப தேவையான குறிப்பிட்ட தகுதிகள் பின்வருமாறு:

அ. மருத்துவ தொழில்கள் (பெண்) – நிலையான / தொண்டர்

(1) நர்சிங் உதவியாளர் (பெண்) – நிலையான / தொண்டர்
(க.பொ.த.) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஆங்கில மொழியில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் சிங்களம் / தமிழ், கணிதம் / அறிவியல் மற்றும் மற்றொரு பாடத்தில் குறைந்தது கிரெடிட் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் மூன்று பாடங்களில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும். அவை அனைத்து விஞ்ஞான பாடங்கள் (இயற்பியல், இரசாயனவியல், உயிரியல்)

அல்லது கணிதம் மற்றும் மற்றொரு ஒரு பாடம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும். மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் கிரெடிட் தேர்ச்சிக்கு தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அறிவியல் / கணிதம் பிரிவுகளில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பது தேர்விற்கான கூடுதல் நன்மையாகவும் சுகாதார அமைச்சகத்தின் கீழ் எதிர்கால மேம்பட்ட பயிற்சிகளுக்கான தகுதியாகவும் கருதப்படும்.

ஆ. செயல்பாட்டு தொழில்கள் (பெண்) – நிலையான / தொண்டர்

(1) நாய் கையாள்பவர் (பெண்) - நிலையான / தொண்டர்

(க.பொ.த.) சாதாரண நிதரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் ஒரு சாதாரண தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை: அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இலங்கை தொண்டர் விமானப்படையில் நேரடி சேர்க்கைக்கான விமானப்படை ஆண்கள் / பெண்கள் வெற்றிடங்கள்

4. தேவையான கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகள்:

அ. பொது பொறியியல் தொழில்கள் (ஆண்) – தொண்டர் (சீருடை அல்லாதது)

(2) மோட்டார் போக்குவரத்து மெக்கானிக் (ஆண்) – தொண்டர் (சீருடை அல்லாதது)

(க.பொ.த.) சாதாரண நிலைப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் / அறிவியல் பாடங்களில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஆங்கிலம் மற்றும் அனைத்து அறிவியல் பாடங்கள் (இயற்பியல், இரசாயனவியல், உயிரியல்) அல்லது கணிதம் ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும்.

மற்றும்

அரசாங்க நிறுவனம் அல்லது அரசின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் (Automobile, Auto Electrical, Automobile Auto Electronic/ Automobile Air Conditioning Mechanic) தொடர்பான பயிற்சியை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிறுத்தல் வேண்டும். தேசிய தொழிற்துறை தகைமையில் இரண்டாம் மட்டம் (NVQ Level II) அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல்.

மற்றும்

மோட்டார் வாகன இயந்திரவியலாளர்/ மோட்டார் வாகன பராமரிப்பு தொடர்பாக குறைந்தது 01 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

ஆ. மருத்துவத் துறைகள் (பெண்) - தொண்டர்

(1) நர்சிங் உதவியாளர் (பெண்) – தொண்டர்

(க.பொ.த.) சாதாரண தர தேர்வில் இரண்டு அமர்வுகளை மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் ஆங்கில மொழி அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகள் இரண்டு அமர்வுகளை மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், இதில் ஆங்கிலம் உட்பட. விஞ்ஞான பாடங்கள் (இயற்பியல், இரசாயனவியல்,உயிரியல்)அனைத்திலும், கணிதத்திலும் Grade கட்டாயமாக இருக்க வேண்டும். மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் (க.பொ.த) சாதாரண நிலைத் தேர்வில் சாதாரண தேர்ச்சிக்குத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமானது அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

மற்றும்

அரசு அல்லது நம்பகமான தனியார் மருத்துவ நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஒரு (01) ஆண்டு கால நர்சிங் பயிற்சி (கிளினிக்கல் பயிற்சியுடன்) பெற்றிருக்க வேண்டும் மற்றும் அதற்கான தேவையான சான்றிதழ்களை வைத்திருக்க வேண்டும். அல்லது NVQ Level III அல்லது அதற்கு மேற்பட்ட நர்சிங் உதவியாளர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

5. **சிறப்பு குறிப்புகள்:**

அ. Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகளுடன் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் சாதாரண (S) தேர்ச்சி இல்லாத விண்ணப்பதாரர்கள், சேவையில் இணைந்த தினத்திலிருந்து 05 ஆண்டுகளுக்குள் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் தேர்ச்சி தரத்தை (pass grading) பெற வேண்டும்.

ஆ. NVQ Level 3 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதி அல்லது SLQF Level 1 அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் க.பொ.த (சா .த) தேர்வுக்கு மாற்றாக கருதப்படும். அதேபோல், NVQ Level 4 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதி அல்லது SLQF Level 2 அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் க.பொ.த (உ .த) தேர்வுக்கு மாற்றாக நேரடி சேர்க்கை (Direct Entry) விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் கருதப்படும்.

6. பிற தேவைகள்:

அ. இலங்கை நிரந்தர / தொண்டர் வான்படையில் சேர்வதற்காக விண்ணப்பதாரர்கள் பின்வரும் பொதுத் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

1) குடியுரிமை - இலங்கையின் குடிமகனாக இருக்க வேண்டும்.

(2) வயது - 01 ஆகஸ்ட் 2026 நிலவரப்படி – 01வது தொகுதி
01 டிசம்பர் 2026 நிலவரப்படி – 02வது தொகுதி

நிரந்தர

பெண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 22 வயது

தொண்டர்

பெண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 26 வயது

நேரடி சேர்க்கை– நிரந்தர / தொண்டர்

ஆண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 30 வயது

பெண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 26 வயது

(3) உயரம்

ஆண்: 5 அடி 3 அங்குலம் (159 செ.மீ.) அல்லது அதற்கு மேல்

பெண்: 5 அடி 1 அங்குலம் (154 செ.மீ.) அல்லது அதற்கு மேல்

(4) உடல் எடை

ஆண்: 17 < BMI < 26

பெண்: 17 < BMI < 25

(5) நிறக்காட்சி தரநிலை CP2

(6) ஒரு கண்ணில் மட்டும் பார்வைக்குறைபாடு 6/9 (வலது/இடது), மற்றய கண் 6/6 (வலது/இடது) (கண்ணாடி மற்றும் லென்ஸ்கள் இல்லாமல்) இருத்தல் வேண்டும்

(7) மார்பு அளவு ஆண்: 32 அங்குலம்

(8) திருமண நிலை

நிரந்தர : திருமணமாகாதவர்

தொண்டர் மற்றும் நேரடி சேர்க்கை திருமணமானவர் /
திருமணமாகாதவர்

(அ.) நிரந்தர வீராங்கனை விண்ணப்பதாரர்கள்

திருமணமாகாதவராக இருக்க வேண்டும். மேலும் சேவையில் இணைந்த தினத்திலிருந்து நான்கு (04) ஆண்டுகள் நிறைவு பெறும் வரை மற்றும் அடிப்படை தொழில்நுட்ப பயிற்சி முடிந்த பின் ஒரு (01) ஆண்டு நிறைவு பெறும் வரை, இதில் எது பின்னர் வருகிறதோ அதுவரை திருமணம் செய்ய அனுமதி இல்லை.

(ஆ) 25 வயதுக்கு மேல் சேர்க்கப்படும் விமான வீரர் / வீராங்கனைகள், சேவையில் இணைந்த தினத்திலிருந்து ஒரு (01) வருடம் நிறைவு பெற்ற பின் மற்றும் Basic Combat Course மற்றும் ஆகியவற்றை முடித்த பின் திருமணம் செய்ய தகுதியுடையவர்கள்.

(இ) நேரடி சேர்க்கை விமான வீரர் / வீராங்கனைகள் (நிரந்தர / தொண்டர்) சேவையில் இணைந்த தினத்திலிருந்து ஒரு (01) வருடம் நிறைவு பெற்ற பின் மற்றும் Basic Combat Course முடித்த பின் திருமணம் செய்ய தகுதியுடையவர்கள்.

7. விண்ணப்பதாரர்கள் தேவையான கல்வித் தகுதிகளை கொண்டிருக்காவிட்டால் அல்லது 03, 04 மற்றும் 06 ஆம் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாவிட்டால் அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதல் நேர்முகத் தேர்விற்கு வருகை தரும் போது உயரம், எடை, மார்பு அளவு மற்றும் பார்வை திறன் அளவிடப்படும். குறிப்பிட்ட தரநிலைக்கு கீழ் உள்ள உயரம், எடை, மார்பு அளவு மற்றும் பார்வை திறன் கொண்ட விண்ணப்பதாரர்கள், சிறப்பு திறன்கள் இல்லாத பட்சத்தில் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேற்கண்ட எந்தவொரு முன் நிபந்தனையையும் பூர்த்தி செய்யாதிருந்தாலும், சிறப்பு திறன் அல்லது தகுதி கொண்ட எந்தவொரு விண்ணப்பதாரரும், இலங்கை விமானப்படையின் தேவைக்கேற்ப, விமானப்படை தளபதியின் விருப்ப அதிகாரத்தின் (discretion) அடிப்படையில் பரிசீலிக்கப்படலாம். ஆனால் அவர்/அவள், இலங்கை விமானப்படையின் நலனுக்காக தேவையான தொழில்முறை / சிறப்பு தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

8. விளையாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க (சிறந்த) சாதனைகள் பெற்றிருப்பவர்களுக்கு உரிய முன்னுரிமை மற்றும் கவனம் வழங்கப்படும்.

9. சேவை நிபந்தனைகள்:

அ. விண்ணப்பதாரர் ஆரம்பத்தில் நிரந்தர அல்லது தொண்டர் அடிப்படையில் விமானப்படையில் விமான வீரர் / வீராங்கனையாக சேர்க்கப்படுவார் மற்றும் அடிப்படை போர்ப் பயிற்சி (Basic Combat Training Course) மேற்கொள்ள வேண்டும். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின் (பயிற்சியின் காலம் தொடர்புடைய தொழில் (trade) அடிப்படையில் மாறுபடும்), அவர்/அவள் சம்பந்தப்பட்ட தொழிலுக்கு ஏற்ப விமான வீரர் / வீராங்கனையாக சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்.

ஆ. விமான வீரர் / வீராங்கனைகள் இலங்கை அல்லது வெளிநாட்டில் பயிற்சி பெற வேண்டியிருக்கும். இது விமானப்படை தளபதி, பாதுகாப்பு அமைச்சகத்துடன் ஆலோசித்து தீர்மானிக்கும் இடத்தில் நடைபெறும்.

இ. விமான வீரர் / வீராங்கனையாக பயிற்சி காலத்திலும் அதற்குப் பிந்தைய காலத்திலும், அனைத்து பணியாளர்களும் இலங்கை விமானப்படை சட்டத்திற்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

ஈ.. ஒவ்வொரு விமான வீரர் / வீராங்கனைக்கும் சீருடைகள், உபகரணங்கள் மற்றும் மருத்துவ வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்.

உ. பயிற்சி காலத்தில் விமான வீரர் / வீராங்கனைகள் விமானப்படை மெஸ்ஸ்களில் (Air Force Messes) தங்க வைக்கப்பட்டு உணவு வழங்கப்படும்.

ஊ. பயிற்சி காலத்தில் ஒரு விமான வீரர் / வீராங்கனை தன்னிச்சையாக தனது விண்ணப்பத்தை விலக்கிக் கொண்டால், அந்த நபருக்காக இலங்கை ச்சனநாயக சோசலிசக் குடியரசு இதுவரை மேற்கொண்ட அனைத்து செலவுகளையும் அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அரசுக்கு மீள செலுத்த வேண்டும்.

எ. பயிற்சி காலத்தில் எந்த நேரத்திலும் ஒரு விமான வீரர் / வீராங்கனை ஒழுங்கு மீறல் அல்லது அவரது/அவளது கட்டுப்பாட்டிற்குள் உள்ள காரணங்களால் தகுதியற்றவர் என அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டால், அந்த நபரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர், அவரின் பயிற்சிக்காக இலங்கை விமானப்படை மேற்கொண்ட அனைத்து செலவுகளையும் மீள செலுத்த வேண்டும். மேலும் இதற்காக இலங்கை அரசின் சார்பில் செயல்படும் விமானப்படை தளபதியுடன் ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

ஏ. (f) மற்றும் (g) உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை ஒட்டியதாக, விண்ணப்பப் படிவத்தின் 32 ஆம் பகுதியிலுள்ள அறிவிப்பை பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பமிட்டு, விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். மேலும், இந்த விண்ணப்பதாரர்கள் விமான வீரர் / வீராங்கனையாக நியமிக்கப்படுவதற்கு முன், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் பின்னர் ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

ஐ. 1 முதல் 6 வரை உள்ள பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் ஆரம்ப நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள். அதில் வெற்றி பெறுவோர் மருத்துவ பரிசோதனைக்கு அழைக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை விமானப்படையின் ஏற்பாட்டில் மருத்துவ மற்றும் உடல் தகுதி பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். இலங்கை விமானப்படை மருத்துவ வேலை தகுதி தரநிலைகளுக்கு ஏற்ப தகுதி உறுதி செய்யப்படும். இந்த பரிசோதனைகளில் வெற்றி பெறுவோர் இறுதி நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள். ஒவ்வொரு தொழிலுக்கும் தேவையான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் இந்த நேர்முகத் தேர்வுகள் மற்றும் பரிசோதனைகளின் திறமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

ஒ. திருமணமாகாத விமான வீரர் / வீராங்கனை விமானப்படை விடுதிகளில் (Barracks) வசிக்க வேண்டும். அவர்களுக்கு மரச்சாமான்களுடன் கூடிய தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும். ஒற்றை விமான வீரருக்கான உணவுக் கொடுப்பனவு மெஸ்ஸுக்கு (Mess) வழங்கப்படும்.

ஓ. திருமணமான விமான வீரர் / வீராங்கனைக்கு, வசதி இருப்பின் திருமண குடியிருப்பு வழங்கப்படலாம். வாடகை மீளப் பெறுதல் பொதுச் சேவை விதிகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படும்.

ஔ. அனைத்து விமான வீரர் / வீராங்கனைகளும் எந்த நேரத்திலும் உலகின் எந்தப் பகுதிக்கும் கடமை அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படக் கூடியவர்களாக இருப்பார்கள்.

க. அனைத்து விமான வீரர் / வீராங்கனைகளும் இலங்கை விமானப்படைச் சட்டம் மற்றும் காலத்துக்கு காலம் வெளியிடப்படும் உத்தரவுகளுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

10. நியமன நிபந்தனைகள் (Terms of Engagement):

அ. நிரந்தர விமான வீரர் மற்றும் வீராங்கனைகள்: தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிரந்தர விமானப்படையின் பதவிகளின் மூன்றாம் வகுப்பில் இணைக்கப்படுவார்கள். அவர்கள் மொத்தம் பன்னிரண்டு (12) ஆண்டுகள் சேவை செய்ய வேண்டும். இதில் எட்டு (08) ஆண்டுகள் இடையறாது செயற்பட வேண்டும். மேலும், தேவையானபோது அழைக்கப்படும் போது நிரந்தர விமானப்படை (Reserve) இல் கூடுதலாக நான்கு (04) ஆண்டுகள் சேவை செய்ய வேண்டியுள்ளது. எட்டு (08) ஆண்டுகள் சேவையை நிறைவு செய்த பின், தகுதியான விமான வீரர் / வீராங்கனைகளுக்கு மேலதிக சேவை நீட்டிப்பு வாய்ப்பு வழங்கப்படலாம். இது இலங்கை விமானப்படை தளபதியின் விருப்ப அதிகாரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

ஆ. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் இல் Aircraftsman / Aircraftswoman தரத்தின் மூன்றாம் வகுப்பில் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் ஐந்து (05) ஆண்டுகள் சேவை செய்ய வேண்டும். ஐந்து (05) ஆண்டுகள் சேவையை நிறைவு செய்த பின்னர், தகுதியானவர்களுக்கு இலங்கை விமானப்படை தளபதியின் விருப்பப்படி மேலதிக சேவையை நீட்டிக்க வாய்ப்பு உள்ளது.

இ. பொது பொறியியல் தொழில்கள் (ஆண்) – தொண்டர் (சீருடை அல்லாதது)தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் இல் தரத்தின் மூன்றாம் வகுப்பில் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் இரண்டு (02) ஆண்டுகள் சேவை செய்ய வேண்டும். இரண்டு (02) ஆண்டுகள் சேவையை நிறைவு செய்த பின்னர், தகுதியானவர்களுக்கு இலங்கை விமானப்படை தளபதியின் விருப்பப்படி மேலதிக சேவையை நீட்டிக்க வாய்ப்பு உள்ளது.

11. **அதிகார பூர்வ மொழி தேவைகள்:** தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள், இலங்கை ச்சனநாயக சமூகவாதக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே இயற்றப்பட்ட அல்லது எதிர்காலத்தில் இயற்றப்படக்கூடிய விதிமுறைகளுக்கு இணங்க செயல்பட வேண்டும். குறிப்பாக, 1956 ஆம் ஆண்டின் அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் எண் 33 இன் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேவைகளை பின்பற்ற வேண்டும்.

12. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:

அ. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கொடுப்பனவுகளுடன் கூடிய ஒருங்கிணைந்த சம்பளங்கள், சம்பந்தப்பட்ட பதவியின் ஆரம்ப நிலை (initial step) என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பதவி நிலைகள்	அடிப்படை சம்பளம்	மொத்த நிலையான கொடுப்பனவுகள்	நிகர சம்பளம்
விமான கலைஞர்	46,922.00	22,150.00	69,072.00
மூத்த விமான கலைஞர்	48,290.00	22,150.00	70,440.00
கார்ப்பரல் (படைப்பிரிவு மேலாளர் நிலை)	49,658.00	22,150.00	71,808.00

குறிப்பு: திருமணமான வெளியில் வசிக்கும் பணியாளர்கள் சுமார் ரூ. 30,000.00 அளவிலான உணவு கொடுப்பனவுக்கும், பொருந்தும் வீட்டு வாடகை உச்சவரம்புக்கும் உரிமையுடையவர்கள்.

ஆ. ஓய்வூதியம் / கிராசுட்டி (Gratuities): 1981 ஆம் ஆண்டு விமானப்படை ஓய்வூதியம் மற்றும் கிராசுட்டி விதிமுறைச் சட்டம் மற்றும் அவ்வப்போது திருத்தப்படுவதற்கேற்ப செலுத்தப்படும். அனைத்து விமானப்படை ஆண் / பெண் பணியாளர்களும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு பங்களிப்பாளர்களாக உள்ளனர். பங்களிப்பு விகிதங்கள் 1970 ஆம் ஆண்டு விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்ட விதிமுறைகளின் படி அமையும்.

13. விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்:

அ. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தின் அனைத்து பிரிவுகளையும் மே குறிப்பிடப்பட்டவடிவமைப்பின்படி சரியாகவும் ஒழுங்காகவும் நிரப்பி, பதிவு தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்: முதன்மை ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை தொழிற்பயிற்சி பள்ளி, எகல, கொட்டுகொட" இவ்விண்ணப்பம் 2026 ஒற்றோபர் 31 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் "நிரந்தர / தொண்டர் விமானப்படை ஆண் / பெண் பணியாளர்களுக்கான விண்ணப்பம்" என குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை www.airforce.lk/joinus/apply என்ற இணையதளம் மூலமும் அனுப்ப முடியும். மூடும் தேதிக்குப் பிறகு இலங்கை விமானப்படை, கொட்டுகொடவில் பெறப்படும் விண்ணப்பங்கள், இந்த அறிவிப்பின் தேவைகளுக்கு ஏற்ப இல்லாதவை மற்றும் பதிவு தபால் மூலம் அனுப்பப்படாதவை பரிசீலிக்கப்படமாட்டாது.

ஆ. அரச சேவை / கூட்டுத்தாபனங்கள் / வாரியங்கள் / சிவில் நிறுவங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை துறைத் தலைவர்கள் / கூட்டுத்தாபனங்கள் / வாரியங்கள் / சிவில் நிறுவங்கள் மூலமாக அனுப்ப வேண்டும். மேலும், தேர்வு செய்யப்பட்டால் அந்த விண்ணப்பதாரரை விடுவிக்கப்படும் என உறுதிப்படுத்தும் சான்றிதழையும் இணைத்திருக்க வேண்டும்.

இ. இணைய வசதி உள்ள விண்ணப்பதாரர்கள் www.airforce.lk/joinus/apply என்ற இணையதளம் மூலம் தங்களது விண்ணப்பங்களை அனுப்பலாம். இணைய வசதி இல்லாத விண்ணப்பதாரர்கள் மேலே 14 (a) பத்தியில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவு தபால் மூலம் தங்களது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

ஈ. நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் போது அல்லது கேட்கப்படும் போது, விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் சான்றளிக்கப்பட்ட புகைப்பட நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்:

(1) பிறப்புப் பதிவு சான்றிதழ் (கல்வி விதிமுறைகளுக்காக வழங்கப்படும் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படாது).

(2) தேசிய அடையாள அட்டை.

(3) விண்ணப்பிக்கப்பட்ட தொழிலுக்கு தேவையான கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளை உறுதிப்படுத்தும் மூலச் சான்றிதழ்கள்.

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் / தொழில்நுட்ப பயிற்சி மற்றும் / அல்லது அனுபவச் சான்றிதழ்கள் (உள்ளிருந்தால்).

(5) சமீபத்திய இரண்டு (06 மாதங்களுக்குள் பெறப்பட்ட) நடத்தைச் சான்றிதழ்கள். இதில் ஒன்று கடைசியாக கல்வி கற்ற பள்ளியின் முதல்வரிடமிருந்து மற்றும் மற்றொன்று விண்ணப்பதாரரை இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அறிந்த பொறுப்புள்ள நபரிடமிருந்து அல்லது தற்போதைய வேலைவாய்ப்பாளரிடமிருந்து (வேலையில் இருந்தால்) பெறப்பட்டிருக்க வேண்டும்.

(6) விளையாட்டு மற்றும் கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கைகளுக்கான ஆதாரச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள்.

(7) ஆறு (06) மாதங்களுக்குள் வழங்கப்பட்ட கிராம சேவையாளர் சான்றிதழ்.

(8) பள்ளி விட்டு வெளியேறும் சான்றிதழ்.

(9) கோப்பு குறியுடன் கூடிய ஒரு சாதாரண கோப்பு (plain folder).

(10) கிராம சேவையாளரால் சான்றளிக்கப்பட்ட 2 x 2 அங்குல அளவுடைய இரண்டு நிறப் புகைப்படங்கள்.

ஈ. கேட்டபோது தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

உ. விண்ணப்பப் படிவத்துடன் எந்த ஆவணங்களையோ அல்லது மூலச் சான்றிதழ்களின் பிரதிகளையோ இணைக்கக் கூடாது.

ஊ. விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படும் எந்த மூலச் சான்றிதழ்களின் இழப்பிற்கும் விமானப்படை பொறுப்பாக இருக்காது.

ஊ. விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதி, உயரம், வயது, மார்பு அளவு போன்ற அடிப்படைதேவைகளின்அடிப்படையில்ஆரம்பநேர்முகத்தேர்விற்குவிண்ணப்பதாரர்கள்அழைக்கப்படுவார்கள். தவறான தகவல்களை வழங்கிய விண்ணப்பதாரர்கள் ஆரம்பச் சரிபார்ப்பில் நிராகரிக்கப்படுவார்கள்.

14. மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களிடையே ஆரம்பத் தேர்வுகள் மேற்கொள்ளப்படும். ஆரம்ப நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் விமானப்படைத் தளபதியால் நிர்ணயிக்கப்படும் மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு தகுதியானதாக கருதப்படும் விண்ணப்பதாரர்கள் தங்களது சொந்த செலவில் விமானப்படை ஆட்சேர்ப்பு குழுவின் முன் நேர்முகத் தேர்விற்கு வருகை தர வேண்டும். இவ்விண்ணப்பதாரர்களுக்கு இடம், தேதி மற்றும் நேரம் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும்.

15. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு நேர்முகத் தேர்விற்கும் அழைக்கப்படும் போது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரர்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பிற அடையாள ஆவணங்களை சமர்ப்பிக்கலாம். இருப்பினும், எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய அடையாள அட்டை இல்லாமல் சேவையில் இணைக்கப்படமாட்டார்.

16. தேர்வு செய்யப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை விமானப்படையின் மருத்துவ மற்றும் உடல் தகுதி தரநிலைகளின்படி மருத்துவ பரிசோதனை மற்றும் உடல் தகுதி சோதனையை தேர்வு செயல்முறையின் போது மேற்கொள்ள வேண்டும்.

17. இந்த நேர்முகத் தேர்வுகள் மற்றும் சோதனைகளில் பெறப்படும் மதிப்பெண்களின் அடிப்படையில் ஒவ்வொரு தொழிலுக்கும் தேவையான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

18. எந்தவொரு நபரும் ஒரு விண்ணப்பதாரரை பரிந்துரைக்க விரும்பினால், அவர்/அவள் ஒரு சான்றிதழ் வழங்குவதன் மூலம் பரிந்துரைக்க வேண்டும். எந்தவொரு வகையான வலியுறுத்தல் (canvassing) அல்லது விண்ணப்பதாரரின் தேர்வை பாதிக்க முயற்சிப்பதும் அந்த விண்ணப்பதாரர் தகுதியிழப்பிற்கு காரணமாகும்.

19. சேவைக்குத் தகுதியற்றதாக கருதப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அதற்கான அறிவிப்பு வழங்கப்படமாட்டாது.

(வீ பீ எதிரிசிங்ஹ),
WWV, RWP, RSP and three Bars, USP,
fndu (China), psc, qhi
எயார் மாஷல்,
விமானப்படை தளபதி.

தலைமையகம்,
இலங்கை விமானப்படை,
பாதுகாப்பு தலைமையகம் கட்டிட தொகுதி,
இல.594, ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டை.

காரியாலய தேவைக்காக

இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில்.....பிரிவில் ஆண் / பெண் வான்படை வீரர் / வீராங்கனைக்கான விண்ணப்பம்

1. தேசிய இனம் :- .....
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.)

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு):- .....
.....

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:-.....

4. நிரந்தர முகவரி :-.....

5. அஞ்சல் முகவரி :-.....

6. பிறந்த திகதி :-.....
(வயது முதலாம் குழு 2026 ஒகத்து 01ம் திகதி / இரண்டாம் குழு 2026 திசெம்பர் 01ம் திகதி நிலவரப்படி)

விண்ணப்பிக்கும் குழு	2026ம் ஆண்டு முதலாம் குழு / 2026ம் ஆண்டு இரண்டாம் குழு
வயது	வருடம்..... மாதம்..... நாள்.....

7. உயரம் :- சென்றி மீற்றரில் .....(.அடி.....அங்குலம்.....)

8. மார்பு அளவு:- அங்குலம்.....

9. நிறை :- கிலோ கிராம் .....

10. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம்:-.....

11. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள வான்படை முகாம் .....

12. மாவட்டம்:- .....

13. தேர்தற் தொகுதி :-.....

14. கிராம உத்தியோகத்தர் பிரிவு :-.....

15. தொலைபேசி இலக்கம். :-..... Whatsapp இலக்கம்- .....
E - mail முகவரி:-... .....

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ;. :-.....

17. பால் : ஆண் /பெண்

18. பாடசாலை பற்றிய விபரங்கள்.....
.....

19. பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

பாடசாலை/ சர்வகலா சாலை பெயர்கள்	*பரீட்சை*	*ஆண்டு மற்றும் சுட்டிலக்கம்*	*சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட)*	
	க.பொ.த (சா.த.)			
	க.பொ.த (உ.த)			
	தொழில் தகைமைகள் வேறு			

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :

21. பாடசாலை இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்.-

தொழில் தருநரின் பெயரும் முகவரியும்	*தொழிலின் தன்மை*	*சேவைக்காலப்பகுதி*	
		இருந்து	வரை

22. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

முழுப்பெயர்	*ஆளடையாள அட்டை இலக்கம்*	*தொழில்*		*தற்போதைய முகவரி*
		முன்பு	*தற்போதைய*	
தந்தை :				
தாய் :				
சகோதர /சகோதரிகள் :				

23. நெருங்கிய உறவினர் யாரேனும் முன்பு அல்லது தற்போது வான் படையிலோ அல்லது ஏனைய ஆயுத படைபடையிலோ சேவையாற்றினால் அது பற்றிய விபரங்கள் அல்லது சேவையில் இருந்து விலகி இருந்தால் விலகிய முறையினை குறிப்பிடுக: (சட்டபூர்வமாக அல்லது சட்டத்திற்கு புறம்பாக)

நிலை	*பெயர்*	*பிரிவு /துறை*	*தற்போதைய விபரம்*

24. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : -(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

தொடர் இல.	*விபரம்*	*பாடசாலை*	*மாகாணம்*	*தேசிய*	*சர்வதேச*

25. புறம்பான சாதனைகள் பாடசாலை . பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் : (திகதிகளுடன் விபரத்தையும் தருக.)

26. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :-

27. இலங்கை வான் படையில் அல்லது ஆயதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிசில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக

28. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக.

29. இதற்கு முன்னர் அரசாங்கத்திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள் / அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம்

30. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

பெயர்	*பதவிப் பெயர்*	*அஞ்சல் முகவரி*

31. விண்ணப்பத்தாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள்யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசவிகள் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்களுக்கு பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

. . . . . .
விண்ணப்பதாரரின் கையொப்பம்

32. விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :–

அ. இலங்கை விமானப்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 31ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் . . . . . இவருக்கு நான் பெற்றோர் / பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன் :-

(1). பயிற்சியின் போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்தில் இலங்கை குடியரசினால் அக்காலம் வரை செலவிடப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைச் சனநாயக சோசவிகள் குடியரசிற்கு திருப்பக் கொடுப்பதற்கும்.

(2). பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாடுக்கு காரணங்களுக்காக விண்ணப்பதாரர் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரைக்கான செலவுகள் யாவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் .

.....
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்

திகதி. :- .....
பெயர். (பெரிய எழுத்துக்களில்) .....
முகவரி :- .....

.....
முதலாம் சாட்சியின் கையொப்பம்

திகதி. :- .....
பெயர். (பெரிய எழுத்துக்களில்) .....
முகவரி :- .....

.....
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்

திகதி. :- .....
பெயர். (பெரிய எழுத்துக்களில்) .....
முகவரி :- .....

10 - 634/2

இலங்கை மதுவரித் திணைக்களம்
மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ் – தமிழ்/சிங்களம்) வகுப்பு 1 இற்கான ஆட்சேர்ப்பு

மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ் – தமிழ்/சிங்களம்) வகுப்பு 1 - பதவி 01

மேற்படி பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமைகள்:

- க.பொ.த. (சாதாரண தரம்) அல்லது அதற்கு இணையான பரீட்சையில், மொழிபெயர்ப்புக்குரிய இரண்டு (02) மொழிமூலங்களிலும் திறமைச் சித்தி (Credit pass) அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையைப் பெற்றிருத்தல் மற்றும்

- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் மற்றும்

- சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கணினி "வேர்ட் பிரோசஸிங்" (word processing) திறன் குறித்த செய்முறைப் பரீட்சையொன்றில் சித்தி பெறுதல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:

மாதாந்தக் கொடுப்பனவு (அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் பிரகாரம் சகல கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய மாதாந்தக் கொடுப்பனவு)

- 2026 ஆம் ஆண்டிற்குரியது – ரூ. 86,623.00 (68,823.00 + 17,800.00)
- 2027 ஆம் ஆண்டிற்குரியது – ரூ. 93,290.00 (75,490.00 + 17,800.00)

சம்பளக் குறியீடு: அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் படி, MN - 6 (MN - 6 /2025)

வயது: விண்ணப்பதாரர்கள் 21 வயதுக்கு குறையாதவராகவும் 65 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

சேவை நிபந்தனைகள்: தற்போதுள்ள வெற்றிடங்கள் நிரந்தர அடிப்படையில் நிரப்பப்படும் வரை அல்லது இரண்டு (02) ஆண்டு காலங்கள் வரை, இதில் எது முதலில் நிகழ்கிறதோ அதுவரை, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

ஆட்சேர்ப்பு முறை: கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சை ஆகியவற்றின் ஊடாக விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களில், உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்பவர்கள் மட்டுமே பரீட்சைக்கும், அதனைத் தொடர்ந்து செய்முறைப் பரீட்சைக்கும் பரிந்துரைக்கப்படுவார்கள். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில், தகுதி வரிசைப்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

- மொழிபெயர்ப்பு – சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு
- மொழிபெயர்ப்பு – தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு

விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி: 2026.10.30

நியமனம் செய்தல் தொடர்பில் தீர்மானிக்கும் உரிமையை இலங்கை மதுவரித் திணைக்களம் கொண்டுள்ளது.

கடித உறையின் இடது மேல் மூலையில் "மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் / தமிழ் - தமிழ் / சிங்களம்) - வகுப்பு 1 இற்கான ஆட்சேர்ப்பு" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

இப்பதவிக்குத் தேவையான தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள், தங்கள் கல்வித் தகுதிகள் அடங்கிய சுயவிபரக் குறிப்பு (CV) மற்றும் உறவினர் அல்லாத நற்சான்றுனர் இருவரின் (02) பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய விண்ணப்பத்தைப் பதிவுத் தபால் மூலம் உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பின்வரும் முகவரியைச் சென்றடையுமாறு அனுப்புதல் வேண்டும். தொழில்சார் அனுபவம் ஒரு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்படாத, பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மதுவரி ஆணையாளர் நாயகம்,
இலங்கை மதுவரித் திணைக்களம்,
இல. 353, கோட்டை வீதி,
ராஜகிரிய.

10 - 674/1

இலங்கை மதுவரித் திணைக்களம்
பொலன்னறுவை சுற்றுலா பங்களாப் பொறுப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு

பொலன்னறுவை சுற்றுலா பங்களாப் பொறுப்பாளர் - பதவி 01

மேற்குறிப்பிட்ட பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில், அதிகபட்சம் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது, குறைந்தது இரண்டு திறமைச் (credit) சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.

தொழில்சார் தகைமைகள் :

கீழைத்தேய மற்றும் மேலைத்தேய சமையல் முறைகள் குறித்த ஆழ்ந்த அறிவு இருத்தல் மேலதிக தகைமையொன்றாகக் கருதப்படுகிறது.

அனுபவம்: :

ஓய்வு விடுதி அல்லது அது போன்ற அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிறுவனத்தில் உணவு விநியோகத் துறையில் மூன்று ஆண்டுகள் பணி அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

இப்பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகள்: :

சுற்றுலா பங்களாவை பொறுப்புடன் நிர்வகித்தல் விருந்தினர்களை வரவேற்றுத் தேவையான உணவு, பானங்கள் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குதல் சுற்றுலா பங்களாவின் கட்டிடங்கள் மற்றும் அங்கிருக்கும் பொருட்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதுடன், பங்களாவைச் சுத்தப்படுத்தல்.

சம்பள அளவுத்திட்டம் : மாதாந்த கொடுப்பனவு (அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன்படி சகல கொடுப்பனவுகளும் அடங்கிய மாதாந்த கொடுப்பனவு)

2026 ஆம் ஆண்டிற்கு - ரூ. 56,663.00 (38,863.00 + 17,800.00)
2027 ஆம் ஆண்டிற்கு - ரூ. 57,800.00 (40,000.00 + 17,800.00)

சம்பளக் குறியீடு : அ.நி.சு. 10/2025 இன்படி பி.எல். - 1 (PL – 1 2025)

வயது : விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் சிறந்த நற்பண்பு கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

வேலைவாய்ப்பு நிபந்தனைகள் : தற்போதுள்ள வெற்றிடங்கள் நிரந்தர அடிப்படையில் நிரப்பப்படும் வரை அல்லது இரண்டு (02) ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு, இவற்றில் எது முதலில் நிகழ்கிறதோ அதுவரை, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

ஆட்சேர்ப்பு முறை : திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தகுதியான விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பங்களை கையேற்பதற்கான இறுதித் திகதி: 2026.10.30

நியமனம் செய்தல் அல்லது செய்யாமை குறித்துத் தீர்மானிக்கும் உரிமையை இலங்கை மதுவரித் திணைக்களம் கொண்டுள்ளது.

கடித உறையின் இடது மேல் மூலையில் "பொலன்னறுவை சுற்றுலா பங்களாப் பொறுப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடல் வேண்டும்.

இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள், தமது கல்வித் தகுதிகள், தொழில்சார் தகுதிகள் மற்றும் பணி அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட சுயவிபரத் தாளில், உறவுமுறை சாராத நற்சான்றுனர் இருவரின் (02) பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்களையும் உள்ளடக்கியவாறு, உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: மேற்படி தகவல்கள் உள்ளடக்கப்படாத, முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மதுவரி ஆணையாளர் நாயகம்,
இலங்கை மதுவரித் திணைக்களம்,
இல.353,
கோட்டை வீதி, ராஜகிரிய.

10 - 674/2

இலங்கை மதுவரித் திணைக்களம்

தொழில்நுட்ப அலுவலர் தரம் III - பதவி 01
மேற்படி பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொழில்நுட்ப அலுவலர் (தரம் III)

கல்வித் தகைமைகள் -:
அத்துறையுடன் தொடர்புடைய இரண்டு பாடங்கள் உட்பட விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பவியல் பிரிவுகளைச் சேர்ந்த மூன்று பாடங்களில் க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.
மற்றும்
சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் பிறிதொரு பாடம் ஆகியவற்றில் திறமைச் சித்தியுடன் (credit pass) ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

தொழில்சார் தகைமைகள் -:

1. மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா, அல்லது
2. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையால் வழங்கப்பட்ட தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா, அல்லது
3. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா, அல்லது
4. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட இரண்டு வருட விவசாய டிப்ளோமா, அல்லது
5. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா, அல்லது
6. இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல், அல்லது
7. வேலைவாய்ப்புத் துறைக்குத் தொடர்புடைய தேசிய தொழிற்கல்வித் தகுதி (NVQ) நிலை 6 தகுதியைக் கொண்டிருத்தல், அல்லது
8. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து அபிப்பிராயம் பெற்றுக்கொண்டதன் மேல் மேற்படி தொழில்நுட்பத் தகுதிகளுக்கு எல்லா வகையிலும் சமமானவை என மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய தொழில்நுட்பத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

அனுபவம்-: உரிய துறையில் பெற்றுக்கொண்ட அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

சம்பள அளவுத்திட்டம் -: அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன்படி மாதாந்த கொடுப்பனவு (சகல கொடுப்பனவுகளும் அடங்கிய மாதாந்த கொடுப்பனவு)

- 2026 ஆம் ஆண்டிற்குரியது – ரூ. 67,002.00 (49,202+17,800)
- 2027 ஆம் ஆண்டிற்குரியது – ரூ. 70,050.00 (52,250+17,800)

சம்பளக் குறியீடு: அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் படி, MN - 3 (MN - 3/2025)

வயது : விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆட்சேர்ப்பு முறை : பொது நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தகுதியானவர் தெரிவு செய்யப்படுவார்.

வேலைவாய்ப்பு நிபந்தனைகள் : தற்போதுள்ள வெற்றிடங்கள் நிரந்தர அடிப்படையில் நிரப்பப்படும் வரை அல்லது ஒரு வருட காலத்திற்கு, இவற்றில் எது முதலில் நிகழ்கிறதோ அதுவரை, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்

விண்ணப்பங்களை கையேற்பதற்கான இறுதித் திகதி -: 2026.10.30

நியமனம் செய்தல் அல்லது செய்யாமை குறித்துத் தீர்மானிக்கும் உரிமையை இலங்கை மதுவரித் திணைக்களம் கொண்டுள்ளது.

கடித உறையின் இடது மேல் மூலையில் "தொழில்நுட்ப அலுவலர் பதவி (ஒப்பந்த) இற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள், தமது முழுமையான சுயவிபரத் தாளில், உறவுமுறை சாராத நற்சான்றுனர் இருவரின் (02) பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்களையும் உள்ளடக்கி, உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.

மதுவரி ஆணையாளர் நாயகம்,
இலங்கை மதுவரித் திணைக்களம்,
இல.353,
கோட்டை வீதி,
ராஜகிரிய.

10 - 674/3

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

சாரதி பதவி – பதவிகள் 02

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

கல்வித் தகைமைகள்:

க.பொ.த (சா/தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது குறைந்தபட்சம் இரண்டு விஷேட சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கனரக வாகனங்களுக்காக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். கனரக வாகன உரிமம் பெற்ற பின்னர் மூன்றாண்டு கால அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.(சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

உள்ளக விண்ணப்பதாரர்கள்

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி உரிமம் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமம் பெற்றதன் பின்னர் வாகனம் ஓட்டுதல் தொடர்பாக குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

முதன்மை அரை-திறன்பெற்ற (PL -2) அல்லது முதன்மை திறன்-பெறாத சேவை பிரிவில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

சம்பள அளவுத் திட்டம்:
2025.03.25ஆம்'திகதியுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.01/2025 இற்கு ஏற்ப பதவியுடன் தொடர்புடைய சம்பள அளவுத்திட்டம்.

ரூபா 43,280.00 - 10 x490 – 10 x540 – 10 x 590 – 12 x630 – ரூபா. 67,040.00 (PL 3 – 2025)

அத்தோடு அத்தகைய சம்பளம் கிடைக்கப்பெறுவது 2027.01.01 இலிருந்தாகும். இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கு இணங்க பதவி செயற்படுத்தப்படுகின்ற தினத்திலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

வயதெல்லை:

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படுகின்ற இறுதித்திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது).

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்

I. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்

II. பதவியின் கடமைகளை சிறப்பாகச் செய்வதற்கும், தீவின்; எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்குஉடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

ஏனைய அனுகூலங்கள்

வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அரசாங்கத்தால்; அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

ஆட்சேர்ப்பு முறை

மேற்கண்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் திட்டமிடப்பட்ட நேர்காணலில் பெற்றுக்கொள்கின்ற புள்ளிகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

சேவை நிபந்தனைகள்

இப்பதவி நிரந்தரப் பதவியாகும். இது மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். மேலும் இப்பதவி ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு உரித்துடையதாகும். ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அடிப்படைச் சம்பளத்தின் 8% ஊழியர் பங்களிப்புச் செய்ய வேண்டும் மற்றும் தொழில்தருநர் 12% பங்களிப்புச் செய்வார் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு தொழில்தருநர் 3% பங்களிப்புச் செய்வார்.

விண்ணப்ப படிமுறை

நிறுவனத்தின் இணையத்தளமான https:/www.judgesinstitute.lk/ இல் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து கீழ்க் குறிப்பிடப்படுகின்ற முகவரிக்கு 2026.10.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை எழுத வேண்டும். விண்ணப்பங்கள் தபாலிடப்படுகின்ற திகதி அல்லாமல் விண்ணப்பங்கள் நிறுவகத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற திகதியே செல்லுபடியாகும் திகதியாகக் கருதுவதற்கு நிறுவகத்திற்கு உரிமையுண்டு.

அத்துடன், விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு மேலதிகமாக, https:/www.judgesinstitute.lk என்ற இணையத்தளத்தில் விண்ணப்பிக்கும் பதவிக்கு உரிய இணைப்பின் ஊடாக காணப்படும் கூகுள் படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் தற்போது சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பங்களை உரிய திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேலும், தபாலில் விண்ணப்பங்கள் தொலைந்துவிட்டதாக முன்வைக்கப்படும் எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பணிப்பாளர்,
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்,

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்,
இல. 80 (5வது மற்றும் 6வது மாடிகள்),
அதிகரண மாவத்தை,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

சாரதி பதவிக்கான விண்ணப்பம் (ஆரம்ப நிலை – திறன்வாய்ந்தது)

(பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் மேல் இடது மூலையில் "சாரதி பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும்.)

1. தனிப்பட்ட விபரங்கள்:

1.1 முழுப் பெயர் (சிங்களத்தில்) : .....

1.2 முழுப் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) : .....

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்) : .....

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) : .....

1.5 நிரந்தர முகவரி : .....

1.6 தேசிய ஆளடையாள அட்டை இல. : .....

1.7 தொலைபேசி இலக்கம் : .....

1.8 மின்னஞ்சல் : .....

1.9 பிறந்த திகதி : ஆண்டு: ..... மாதம்: ..... திகதி: .....

1.10 விண்ணப்பம் முடிவுறும் திகதியன்று வயது : வருடங்கள்: ..... மாதங்கள்: .....
நாட்கள்: .....

1.11 பால் (ஆண் /பெண்) : .....

1.12 திருமண நிலை : .....

2. கல்வித் தகைமைகள்:

(க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை – இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில், குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் குறைந்தது 02 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.)

2.1 முதலாம் அமர்வு:

பரீட்சை நடைபெற்ற ஆண்டு: ..... சுட்டெண்: .....

இல.	பாடம்	சித்தி
01		
02		
03		
04		
05		
06		
07		
08		
09		

2. இரண்டாம் அமர்வு (ஏற்புடையதாக இருந்தால் மாத்திரம்):

பரீட்சை நடைபெற்ற ஆண்டு: ..... சுட்டெண்.: .....

இல.	பாடம்	சித்தி
01		
02		
03		
04		
05		
06		
07		
08		
09		

3. சாரதி அனுமதிப்பத்திரத்தின் விபரங்கள்:

3.1 சாரதி அனுமதிப்பத்திர இல.: .....

3.2 வழங்கப்பட்ட திகதி : .....

3.3 காலாவதியாகும் திகதி : .....

3.4 அனுமதிப்பத்திர வகை (கனரக வாகனம் /இலகு வாகனம்) : .....

4. சேவை அனுபவத்தின் விபரங்கள்:

(வெளிவாரியான விண்ணப்பதாரர்கள், கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர் 03 வருட சேவை அனுபவம் பெற்றிருப்பதை உறுதிப்படுத்தும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்கள் 03 வருட சாரதி அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.)

நிறுவனத்தின் பெயர்	பதவி	தொடங்கிய திகதி	முடிவடைந்த திகதி	சேவைக் காலம் (ஆண்டுகள்/ மாதங்கள்)

5. உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்:

(ஆரம்ப அரைத் திறன்வாய்ந்த (PL-2) அல்லது ஆரம்ப திறனற்ற (PL-1) பதவி வகையில் திருப்திகரமான 05 வருட சேவையை நிறைவு செய்தவர்களுக்கு மட்டும்.)

5.1 தற்போதைய பதவி : .....

5.2 சேவை வகைப்பாடு (PL-1 /PL-2) : .....

5.3 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : .....

5.4 நிறைவு செய்த மொத்த சேவைக் காலம் : .....

6. நன்னடத்தைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினரல்லாத இரு மத்தியஸ்தர்களின் விபரங்கள்:

மத்தியஸ்தர் 1:

பெயர் : .....

பதவி மற்றும் முகவரி : .....

தொலைபேசி இல. : .....

மத்தியஸ்தர் 2:

பெயர் : .....

பதவி மற்றும் முகவரி : .....

தொலைபேசி இல. : .....

7. விண்ணப்பதாரரின் பிரகடனம்:

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதுமாகும் என இத்தால் பிரகடனம் செய்கின்றேன். ஏதேனும் பொய்யான, தவறான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால், எனது விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கும் அல்லது நான் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டிருந்தால் எனது சேவையை முடிவுறுத்துவதற்கும் நிறுவனத்திற்கு உரிமையுண்டு என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

திகதி: ..... விண்ணப்பதாரரின் கையொப்பம்: .....

8. திணைக்களத் தலைவர் / நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:

(தற்போது அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச்சட்ட நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்.)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி./செல்வி/ ..... எமது திணைக்களம் / நிறுவனத்தில் ..... ஆக தற்போது சேவையாற்றுகின்றார் என்பதையும், மேற்குறிப்பிட்ட பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் நான் சான்றளிக்கின்றேன்.

....
(திகதி) (நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை)

இலங்கை நிரந்தர கடற்படையின் குறுகியகால சேவையின் அடிப்படையில்
மயக்கவியல் மருத்துவ நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்தல் -2026

1. இலங்கை தொண்டர் கடற்படை ஆண்/பெண் வைத்திய அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பேச்சு மற்றும் மொழி சிகிச்சை (தொண்டர்) பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த ஆண்/பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

3. அடிப்படைக் கல்வித் தகைமைகள்:

அ. இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் தாய்மொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களிள் திறமைச் சித்திகளுடன் (C) மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ. இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் தாய்மொழி பாடத்தில் திறமைச் சித்தியுடன் (C) கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் ஆங்கில பாடத்தில டிப்ளோமா சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4. உயர்கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்:

அ. மயக்கவியல் மருத்துவ நிபுணர் (தன்னார்வு கடற்படை)

பதவிநிலை	-	வைத்திய கமாண்டர் (ஆண்/பெண்)
தகைமைகள்	-	இலங்கை மருத்துவ சபையில் சிறப்பு நிபுணராக பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். முதுகலை மருத்துவ நிருவனத்தால் மயக்கவியல் மருத்துவ நிபுணராக சான்றளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
வயது	-	48 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

5. ஏனைய தகைமைகள்

இலங்கை தொண்டர் கடற்படைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பின்வரும் பொது நிபந்தனைகளை விண்ணப்பதாரிகள் கட்டாயம் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அ. தேசிய இனம்	-	இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ஆ. வயது	-	48 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
இ. உயரம்	- -	ஆண் - 5''6''(167.64 செ.மீ) குறையாதிருத்தல் வேண்டும். பெண் 5'3''(160.02 செ.மீ); குறையாதிருத்தல் வேண்டும்.
ஈ. நிறை	-	ஆண் 17- 27 குறையாதிருத்தல் வேண்டும். பெண் - 17- 27 குறையாதிருத்தல் வேண்டும்.
உ. மார்பு	-	ஆண் - 32 (81.28 செ.மீ) குறையாதிருத்தல் வேண்டும்.
ஊ. பார்வை நிறம்	-	எஸ்ரிடீ II (உரிய பார்வை)

எ. பார்வைத் திறன்	-	இடக் கண்ணில் 6/6 மற்றும் வலக் கண்ணில் 6/6(மூக்குக்கண்ணாடி மற்றும் தொடர்பு வில்லைகள் இன்றி) (மருத்துவ துறைக்காக 6/12 கண்வில்லைகள் மூலம் 6/6 சரி செய்யப்பட்ட நபர்கள் பரிசீலிக்கப்படலாம்)
ஏ. சிவில் அந்தஸ்து	-	திருமணமானவர்/திருமணமாகாதவர்

6. விளையாட்டுத் துறையில் காட்டிய சிறந்த சாதனைகள் மீது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்பதுடன், ஏற்கனவே அரச/ தனியார் துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் மீது விசேட முன்னுரிமை வழங்கப்படும்.

7. சேவை நிபந்தனைகள்

அ. விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படை ஆண்/பெண் உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என்பதுடன், அவர்கள் அடிப்படை பயிற்சி நெறிகளை 03 கிழமை பின்பற்றுதல் வேண்டும். ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அந்தந்த பிரிவின் அடிப்படையில் பயிற்சிப் பாடநெறிக் காலப்பகுதி வேறுபடும்.

ஆ. இலங்கை கடற்படையில் இணைந்து கொண்டதன் பின்னர் இலங்கை கடற்படையின் பொது மருத்துவ மணை (கொழும்பு)

இ. பயிற்சிக் காலத்தின்போதும், அதன் பின்னரும் எல்லா ஆண்/பெண் உத்தியோகத்தர்களும் இலங்கை கடற்படைச் சட்டம், கடற்படை உத்தரவுகள் மற்றும் குறிப்புகள் மூலம் அமுல்படுத்தப்படும் விதிகள், ஒழுங்குமுறைகள், இங்கு விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக் காலப்பகுதியில் எவரேனும் உத்தியோகத்தர்; ஒருவருக்கு தமது அபேட்சகத்துவத்தை சுயவிருப்பின் பேரில் இடைநிறுத்திக்கொள்வதற்குத் தேவைப்படின், அவ் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை அரசாங்கத்தினால் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும்; அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

உ. பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொருசந்தர்ப்பத்திலும் எவரேனும் ஆண்/பெண் உத்தியோகத்தரொருவரின் தவறான நடத்தை காரணமாக அல்லது அவர் பொறுப்புக்கூற வேண்டிய ஏதேனும் காரணி காரணமாக அதிகார ஆணை வழங்கப்படுவதற்கு அவர் தகைமையற்றவர் என அதிகாரிகளினால் தீர்மானிக்கப்பட்டால், அவ் உத்தியோகத்தர் சார்பில் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அச்சந்தர்ப்பத்திலேயே இலங்கை அரசுக்குத் திருப்பிச் செலுத்துவதற்கு இணங்குவதாக, இலங்கை அரசின் பிரதிநிதி என்ற வகையில் இலங்கை கடற்படைத் தளபதியுடன் உடன்படிக்கையொன்றிற்கும், பிணைமுறியொன்றிற்கும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

ஊ. பயிற்சிக் காலப்பகுpயில் ஆண்/பெண் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை கடற்படை இல்லங்களிலிருந்து தங்குமிட வசதிகளும், உணவும் வழங்கப்படும்.

எ. வெற்றிடமாகவுள்ள திருமணமானவர்களுக்கான இல்லங்களை அடிப்படையாகக் கொண்டு திருமணமான ஆண்/ பெண் உத்தியோகத்தர்களுக்கு இல்லங்கள் வழங்கப்படும். இதற்கான இல்ல வாடகை அரச ஊழியர்களுக்கு ஏற்புடையவாறு அறவிடப்படும்.

8. அரசகரும மொழித் தேவைப்பாடுகள்

தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் பிரகாரம் மொழிக் கொள்கையை அமுல் செய்யும் பொருட்டு ஆக்கப்பட்டுள்ள மற்றும் இணைந்தற்கு பின்னர் ஆக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகள் மற்றும் உறுப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

9. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்

10 / 2025 ஆம் இலக்க அரச நிர்வாக முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

கொடுப்பனவுகள்	விசேட தரம்
அடிப்படை சம்பளம்	136,575.00
பணி இடையுறு வருகை மற்றும் போக்குவரத்து	70,000.00
ஓய்வூதிய கொடுப்புனவு	3,400.00
கூடுதல் சிறப்பு கொடுப்பனவு	1,500.00
மொழி கொடுப்பனவு	4,248.00
தொடர்பு திறன் கொடுப்பனவு	6,000.00
மேலதிக கொடுப்பனவு (மாதம் மணித்தியாளம் 120)	185,040.00
1/20 கொடுப்பனவு (தினந்தோரும்) (மாதம் நாள் 03)	15,939.99
உணவுக் கொடுப்பனவு	34846.80
மொத்தம்	457,549.79

10. பயிற்சியின் போதும் அதற்கு பின்னரும் உள்ள வசதிகள், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள்.

அ. பயிற்சிக் காலத்தில் அலுவலர்கள் அதிகாரிகளுக்கு தங்குமிட வசதிகள் மற்றும் உணவு வழங்கப்படும்.

ஆ. இலவசமாக ரயில் பயணிப்பதற்கான விடுமுறை இரயில்வே அனுமதிகளின் மூன்று தொகுப்புக்கள் (உத்தியோகத்தர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் அவரை சார்ந்திருப்பவர்களுக்கு பொருந்தும்) வழங்கப்படும்.

இ. முகாமில் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாதத்தில் ஒரு தடவை வீட்டிற்கு செல்வதற்கும், சென்று வருவதற்கும் ஒரு சோடி கடமை நிமித்தமான புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும் அல்லது பேரூந்துக் கட்டணம் செலுத்தப்படும்.

ஈ. சீருடை மற்றும் அதனுடன் இணைந்த துணைப்பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

உ. இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (உத்தியோகத்தர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் அவரை சார்ந்திருப்பவர்களுக்கு பொருந்தும்).

ஊ. அரசாங்க திருமணமானவர்களுக்கான இல்லமொன்றில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்ளாத திருமணமான ஆண்/பெண் உத்தியோகத்தர்கள் வீட்டு வாடகைப் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்களாவர்.

எ. வெளியிலிருது உணவினை பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் உணவுக் கொடுப்பனவு வழங்கப்படும்.

ஏ. ஏற்புடையவிடத்து தகைமைக் கட்டணம் வழங்கப்படும்.

ஐ. திருமணமான உத்தியோகர்களுக்கு திருமண வீடுகளில் உள்ள காலியிடங்களின் அடிப்படையில் வீடுகள் வழங்கப்படுகின்றன. இதற்கு அரச ஊழியர்ளுக்கு பொருந்தும் வகையில் வீட்டு வாடகை வசூலிக்கப்படும்.

ஒ. அரச மற்றும் தனியார் வங்கிகளிள் கடன் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு

ஓ. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் உள்நாடு மற்றும் வெளிநாட்டு பயிற்சியிள் இணைந்து கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும்.

ஔ. பதவி உயர்வின் போது சாரதியுடன் கூடிய அதிகாரபூர்வமான மகிழுந்து வழங்கப்படும்.

11. விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.

அ. விண்ணப்பங்களை கீழ்காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். விண்ணப்பபடிவங்களை 2026 நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), இலங்கை கடற்படை தலைமையகம், பாதுகாப்பு தலைமையக வளாகம் த.பெ. இல.593, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பதிவுத்தபால் மூலம் அனுப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் இடப்பக்க கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "நேரடி நுழைவு 2026/01 – ஆண்/பெண் உத்தியோகத்தர்கள்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு www.navy.lk/join us vacancies எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும் அல்லது 0760275685 011-7195154 /011-7195120 /எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆ. நிகாரிக்கப்பட்ட/ விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாது. ஏந்தவொரு விண்ணப்பமும் தொலைந்துவிட்டதாகவோ அல்லது பதிவு தபாலில் தாமதமாகிவிட்டதாக எந்தவொரு புகாரும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான எந்தவொரு அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

இ. அரசாங்க சேவையிலுள்ள (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டால் விடுவிக்கப்படுவார் எனும் அத்தாட்சிப்படுத்தல் சகிதம் நிறுவனத்தலைவர் ஊடாக (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஈ. விண்ணப்பதாரிகள், நேர்முகப்பரீட்சையின்போது அல்லது வேறேதேனும் சந்தர்ப்பத்தில் கீழ்க் காட்டப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்களை அனுப்பும்போது அவ் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை இணைத்து அனுப்புதலும் வேண்டும்.

(1) பிறப்புப் பதிவுச்சான்றிதழ்.
(2) விண்ணப்பித்த பிரிவிற்காக தேவைப்படுத்தப்பட்ட கல்வி/ உயர்கல்வி/தொழிற்கல்விஃ பட்டத்தகைமைகள் மற்றும் முதுகலைப் பட்டம் பற்றிய சான்றிதழ்கள்.
(3) பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட பாடசாலை விடுகைப்பத்திரம் மற்றும் குணநலச்சான்றிதழ்.
(4) ஆறு மாத காலத்திற்குள் பெற்றுக்கொண்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ்.
(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொண்ட தொழில்/ தொழில்நுட்ப அ னு ப வ ச் சான்றிதழ் (ஏதாவது இருப்பின்).
(6) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு குணநலச்சான்றிதழ்கள் (இரண்டு வருடங்களுக்கு மேல் விண்ணப்பதாரியை நன்கு அறிந்து வைத்திருக்கும் பொறுப்புவாய்ந்தநபரொருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில்தருநரிடமிருந்து).
(7) இலங்கை மருத்துவ சபையில் உறுப்பினர் சான்றிதல் பெற்றிறுத்தல் வேண்டும் (SLMC).
(8) சிறப்பு மருத்துவ அதிகாரிகள் சபையில் உறுப்பினர் சான்றிதல் பெற்றிறுத்தல் வேண்டும்.

ஈ. கோரப்படும்போது மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

உ. வேறு ஆவணங்களோ அல்லது ஆவணங்களின் மூலப்பிரதிகளோ விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் ஆகாது. விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை அனுப்பிவைத்து அவை காணாமல் போகுமாயின், இலங்கை கடற்படை அதற்கு பொறுப்பேற்காது.

12. விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள ஏதேனும் கூற்று பொய்யானதென கண்டறியப்பட்டால், அப் பொய்யான கூற்று தெரிவிற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தகைமையிழப்பிற்கு ஆளாவார். தெரிவின் பின் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தண்டனையுடன் பதவி நீக்கத்திற்கு ஆளாவார்.

மட்டும்

ஈ. ஆட்சேர்ப்பிற்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

உ. நேர்முகப்பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு, நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன பற்றி வட்ஸ்அப் செயலி (Whatsapp) ஊடாக மட்டுமே அறிவிக்கப்படும் என்பதுடன், எழுத்துமூலமான தகவல்கள் எதுவும் தபால் மூலம் அறிவிக்கப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவது தொடர்பாக பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு கொடுப்பனவுகளோ செலுத்தப்படமாட்டாது.

ஊ. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தனது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

எ. விண்ணப்பதாரியொருவரை பரிந்துரை செய்ய நற்சான்றிதழ் ஒன்றை அவருக்கு வழங்குவதல் வேண்டும். விண்ணப்பதாரியொருவரைத் தெரிவுசெய்வதில் எந்தவொரு வடிவிலான வலியுறுத்தல் அல்லது செல்வாக்கு செலுத்த முயற்சித்தல் என்பவை அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையிழக்கச் செய்யும்.

ஏ. விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி மற்றும் தொழிற்தகைமை சான்றிதழ்களின் செல்லுபடித்தன்மை பரீட்சைகள் திணைக்களம், இலங்கை மருத்துவ சபை ஒருங்கிணைப்புடன் உறுதிசெய்யப்படும்.

ஐ. எல்லா விண்ணப்பதாரிகளினதும் பாதுகாப்பு இசைவு அறிக்கைகள் (Reports on security clearance) கடற்படைத் தலைமையகத்தினால் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

13. இலங்கை கடற்படை கட்டளைத்தளபதி, இலங்கை கடற்படையில் நேரடி நுழைவு அலுவலர்கள்(ஆண்/பெண்) ஆட்சேர்ப்பு செய்கின்ற செயன்முறையின் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தத்துவத்தை கொண்டிருப்பதுடன், தேசிய பாதுகாப்பு மற்றும் இலங்கை கடற்படையின் நிர்வாகம்சார் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கேற்ப இலங்கை கடற்படை கட்டளைத்தளபதி மேற்படி தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான இறுதித் தீர்மானம் மேற்கொள்கின்ற தற்றுணிவினைக்கொண்டிருப்பார்.

குறிப்பு: இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

கேடீடீசீடீ பெர்னாண்டோ, ஆர்எஸ்பி,
வீஎஸ்வீ, யூஎஸ்பி, என்டீசீ,ஆர்சீடீஎஸ்
துணைக் கடற்படை தளபதி.

இலங்கை கடற்படைத் தளபதி,
இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த.பெ. இல. 593,
பத்தரமுல்லை.

**இலங்கை நிரந்தர கடற்படையின் குறுகியகால சேவையின் அடிப்படையில்
மயக்கவியல் மருத்துவ நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்தல்**

1. தேசிய இனம்: ……
(பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா இலங்கைப் பிரசை என்பதைக் குறிப்பிடவும். பதிவின் மூலமாயின் பதிவுச் சான்றிதழின் இலக்கததையும் திகதியையும் குறிப்பிடவும்)
2. விண்ணப்பிக்கும் பிரிவு/பதவி: ……..
3. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையில் உள்ளவாறு) : ……
4. தேசிய அடையாள அட்டை இலக்கம்: …….
5. நிரந்தர முகவரி: ……
6. தபால் முகவரி: ……
7. மின்னஞ்சல் முகவரி: ……..
8. பிறந்த திகதி: ……
9. வயது: வருடங்கள்…. மாதங்கள்…… நாட்கள்……(2026 நவம்பர் மாதம் 10 திகதிக்கு)
10. உயரம்…… (அங்குலம்) மார்பு…… (அங்குலம்) நிறை ….(கிலோகிராம்)
11. நிரந்தர வதிவிடத்திற்கு உரிய பொலிஸ் நிலையம்: ……..
12. மாவட்டம்:……
13. தேர்தல் தொகுதி: ……
14. கிராம உத்தியோகத்தர் பிரிவு: ……
15. தொலைபேசி இலக்கம் (Whatsapp): ……
16. சிவில் அந்தஸ்து: ……..

17.பால்நிலை:.....

18. கல்விகற்ற பாடசாலைகள் :.....

19. பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள்:

பாடசாலையின்/ பல்கலைக்கழகத்தின் பெயர்	*சித்தியெய்திய பரீட்சை*	*பரீட்சைக்குத் தோற்றிய வருடம்*	*சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக)*
	க.பொ.த. (சா.த) க.பொ.த. (உ.த) ஏனைய		

20.பாடசாலை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் (ஏற்புடையதாயின்):

தொழில்தருநரின் பெயர் மற்றும் முகவரி	தொழிலின் தன்மை	சேவைக்காலம்	
		இருந்து	வரை

21. பெற்றோர் பற்றிய விபரங்கள்:

முழுப்பெயர்	பிறந்த இடம்	தொழில்	தற்போதைய முகவரி
தந்தை தாய்			

22. பதவிக்கான ஏதேனும் விசேட தகைமைகள்:.....

23. விளையாட்டுகளில் படைத்த சாதனைகள் பற்றிய விபரங்கள் (பங்குபற்றிய போட்டிகள் மற்றும் விளையாட்டுக் குழுக்கள், திகதி மற்றும் படைத்த சாதனைகளுடன் தருக).....

24. பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிவாரியான நிறுவனங்களில் காட்டிய பிற சாதனைகள்(திகதி,ஆண்டு முதலியவற்றுடன் விபரங்களைத் தரவும் .....

25. ஆயுதப்படை, தொண்டர்படை, பயிலிளவல் படை அல்லது ஆண் சாரணர் அமைப்பில் ஆற்றிய ஏதேனும் முன்னரான சேவை:.....

26. இலங்கை கடற்படையில் இணைவதற்காக நீங்கள் பயன்படுத்திய முறை அல்லது ஊடகத்தினை குறிப்பிடவும். .....
.....

27. இலங்கை கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படைச் சேவைகளில் அல்லது பொலிஸ் படையில் இணைவதற்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ளீர்களா? அவ்வாறெனின், அவை பற்றிய விபரங்களையும் பெறுபேறுகளையும் குறிப்பிடவும்: .....

28. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றைப் பெற்றுள்ளீரா? அவ்வாறெனின், விபரங்களைத் தரவும்:.....

29. அரச திணைக்களமொன்றில், சபையொன்றில், கூட்டுத்தாபனமொன்றில் பகிரங்கச்சேவை தாபனமொன்றில் (மத்திய வங்கி/ அரச வங்கிகள்/பல்கலைக்கழகங்கள்/சிவில் அமைப்புக்கள்/அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் கம்பனிகள் அடங்கலாக) நீங்கள் சேவையாற்றியுள்ளீரா? அவ்வாறெனின், தொழில் முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும் விபரங்களையும் குறிப்பிடுக:.....

30. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள்:

பெயர்	பதவி	தபால் முகவரி

31. விண்ணப்பதாரியினால் கைச்சாத்திடப்பட வேண்டிய வெளிப்படுத்தல்:

மேலே என்னால் கூறப்பட்ட விடயங்கள் உண்மையானவையும் சரியானவையும் என எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில் வெளிப்படுத்துகின்றேன். இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கடற்படையில் உள்ள அதிகார ஆணைக்குழுவிற்காக தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக கடைபிடிக்கப்படும் நடவடிக்கைமுறையையும் பிரயோகிக்கப்படும் ஒழுங்குவிதிகளையும் நான் நன்கு வாசித்து புரிந்துகொண்டேன்.

....
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

பூர்த்தி செய்யபட்ட விண்ணப்ப படிவத்தை (தகுதிகள் தொடர்பான ஆவணங்களின் சான்றழிக்கபட்ட நகலுடன்) கீழே உள்ள முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

மூத்த பணிப்பாளர் அதிகாரி (ஆட்சேர்ப்பு)
இலங்கை கடற்படைத் தலைமையகம்,
பாதுகாப்பு தலைமையக வளாகம்
த.பெ. எண் 593,
பத்தரமுல்லை.

தொடர்புக்கு: Email: nhqssorec@gamail.com, தொ.பே : 0760275685, 0117195154 , 0117195120

10 - 575

திருத்தம்

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி நீடிப்பு

நீதிச்சேவை ஆணைக்குழு

விவசாய மீளாய்வுச் சபை ஒன்றை அமைப்பதற்கு தேவையான உறுப்பினர்களை (குழு) நியமித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2497 மற்றும் 2026.07.10 ஆந் திகதிய வர்த்தமாளியில் I ஆம் பாகத்தின் (IIஅ) பிரிவில் ட வெளியிடப்பட்ட "விவசாய மீளாய்வுச் சபை ஒன்றை அமைப்பதற்கு தேவையான உறுப்பினர்களை (குழு) நியமித்தல்" அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி தொடர்பான பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது

"அனைத்து விண்ணப்பங்களும் 2026, நவெம்பர் மாதம் 10 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்பதபகவோ நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்."

லேலும் 2026.07.10 ஆந் திகதிய ஆரம்ப விண்ணப்பம் கோரும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதுடன் ஏற்கனவே இப்பதவிக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்

பிரசன்ன அல்விஸ்,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு - 12,
2026, ஒற்றோபர் 08.

10 - 631

கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 41ஆ ஆம் உறுப்புரையின் கீழ் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் வரவிருக்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆர்வமுள்ள தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதற்கிணங்க, அரசியலமப்பின் பிரிவு 153அ (1) (அ) உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில் பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதியாக அல்லது அதற்கு மேறபட்ட பதவி வகித்த ஓய்வுபெற்ற அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

www.parliament.lk எனும் இலங்கைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் "கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள்.

அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயவாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

எனும் முகவரிக்கு, 2026 , ஒற்றோபர்30 ஆந்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக "கணக்காய்வுச சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" எனக் குறிப்பிடவும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

2026.10.15

10 - 632

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

ஆரம்ப தரத்தின் அரை தொழில்நுட்ப சேவை வகுதியின் III ஆம் தரத்தில் ஆய்வுகூட உதவுனர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையின் பொருட்டு விண்ணப்பம் கோரல் - 2026

ஆரம்ப தரத்தில் அரை தொழில் நுட்ப சேவை வகுதியின் III ஆம் தரத்தில் ஆய்வுகூட உதவுனர் பதவியில் நிலவும் வெற்றிடங்கள் 20 இன் பொருட்டு நியமனமம் செய்வதற்கு தகைமை உள்ளோரை தெரிவு செய்வதற்காக தகைமை உள்ளவர்களிடம் இருந்து, அரசாங்க சேவைகள் ஆட்சேர்ப்புச் செய்யும் செயற்பாட்டின் மீளாய்வு செய்தல் மற்றும் பதவியணியினரை முகாமை செய்வதன் பொருட்டு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவின் இலக்கம் PMO/RRPCM/2025/decision மற்றும் 2025.11.12 ஆந் திகதிய அனுமதிக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் திறந்த முறை விண்ணப்பகாரரால் நேரடியாகவும், மட்டுப்படுத்திய முறையில் விண்ணப்பம் செய்பவர்கள் தமது அலகு தலைவரின் ஊடாக சான்றுபடுத்தி "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம், கொட்டம்பே, பேராதனை", எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பம் உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் ஆய்வுகூட உதவுனர் பதவி" என்று தெளிவாக குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும்.

மட்டுப்படுத்திய விண்ணப்பக்காரர் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் ஆரம்ப தரத்தில் நுட்பவியலாளர் அல்லாத பதவியொன்றில் குறைந்தது 05 வருட சேவைக்காலத்தை பூரணப்படுத்தி பதவியில் உறுதிப்படுத்தி இருக்க வேண்டியதுடன் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தேவையான ஆரம்ப தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி 2026, நவெம்பர் 13 ஆந் திகதி ஆகும்.

குறிப்பு: தொலைந்து போன அல்லது தாமதமான விண்ணப்பப் படிவங்கள் அல்லது அது தொடர்பான கடிதப் போக்குவரத்து குறித்த முறைபாடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதமாகச் சமர்ப்பிப்பதால் ஏற்படும் இழப்பை, விண்ணப்பதாரர்களே ஏற்க வேண்டும். மேலும், அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதார்களின் விண்ணப்பங்கள் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும்.

01. ஆட்சேர்ப்பு முறை

I. ஆய்வுகூட உதவுனர் பதவியில் நிலவும் வெற்றிடங்களில் 50% திறந்த அடிப்படையிலும், 50% மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

II. நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் நடைமுறைக்கு வரும் தேதி ஆகியவை, அரசாங்க வேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள கால்நடை உற்கபத்தி மற்றும் சுகாதரரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகததினால் தீர்மானிக்கப்படும்.

02. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்

i. இப்பதவி நிரந்தரமானது, ஒய்வூதியம் உடையது. உமக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டமுறை தொடர்பில் அரசாங்களத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கு நீர் உட்படுத்தப்படுகின்றீர். மேலும் நீர் விதவைகள் அநாதைகள் ஒய்வூதிய நிதியத்துக்கு/ தபுகாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். தாங்கள் காலத்துக்கு காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்துக்கு உதவு தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

ii. தெரிவு செய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் ஆய்வுகூட உதவுனர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதன் பொருட்டு நியமனம் செய்யப்படுவர்.

iii. பதவியின் பொருட்டு நியமனம் பெறும் விண்ணப்பக்காரர்கள் 2020.10.16 ஆம் திகதிக பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இற்கு அமையவும் மற்றும் அது சார்ந்த சுற்றறிக்கைகளின் ஒழுங்கு விதிகளுக்கு அமையவும் உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

iv. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றக் கடமைப்பட்டவர் ஆவர்.

v. உரிய சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இலக்கம் PSC/EST/5/1/6/1/2012 மற்றும் 2012.09.27 ஆம் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட கால்நடை காலநடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் ஆரம்ப நிலை அரை தொழில்நுட்ப சேவைப் பிரிவுக்கான ஆட்சேர்ப்பு முறைமை மற்றும் அதில் அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்கள், சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஒழுங்கு விதிக்ளுக்கும், நிதிப் பிரமாணத்திற்கும் மற்றும் திணைக்களத்தின் ஏனைய விதிகளுக்கும் இந்தியமனம் உட்படுத்தப்படும்.

03. சம்பளத்திட்டம்

2025.03.25 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் உப அட்டவணை II இற்கு அமைய இந்த பதவிக்குரிய மாதரந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 41,800 - 10 x490 - 10 x540 - 10 x590 - 12 x630 - ரூ. 65,560 (PL 2 - 2025) ஆகும். உமக்கு சம்பளம் வழங்கப்படுவது அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் உப அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமையவாகும்.

04. கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள் (திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பகாருக்கான)

I. கல்வித் தகைமைகள்

க. பொ. த. (சா./த.) ப் பட்சையில் ஒரு தடவைகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்கள் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

II.**தொழிற் தகைமைகள்**

உயர்கல்வி மற்றும் தெரிழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து, தேசிய தொழிற்கல்வித் தகுதியின் (N.V.Q) நிலை 2 அல்லது 3 க்குக் குறையாத ஆய்வுகூட பணித் திறன் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

05. அனுபவம் (திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பக்காரர் பொருட்டு)

ஆய்வுகூடம் ஒன்றில் 02 வருட சேவை அனுபவம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றிருத்தல் வேண்டும். அவ்வனுபவத்தை சான்றிதழின் ஊடாக சாறுபடுத்தல் வேண்டும்.

06. வயது எல்லை

I. திறந்த விண்ணப்பக்கார பொருட்டு

விண்ணப்பகாரர்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தியகதியன்று (2026.11.13) வயது 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதினை விஞ்சிவிடாலும் இருத்தல் வேண்டும்.
(உறுதிப்படுத்துவதன் நிமித்தம் பிரதேச செயலாளர் பணிமனையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பிறப்பு அத்தாட்ச்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியை சமர்ப்பிக்க வெண்டும்.)

II. மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பக்காரர் பொருட்டு - வயது எல்லை ஏற்புடையதன்று

07. உடற் தகைமைகள்

விண்ணப்பக்காரர் யாவரும் நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யக் கூடியதாக உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

08. **ஏனைய தகைமைகள்**

i. விண்ணப்பக்காரர் இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பக்காரர் சிறந்த நன்டைத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (அது தொடர்பாக விண்ணப்பக்காரர் வதிவிடப் பிரதேச கிராம அலுவலரினால் ஆறு மாதத்திற்குள் பெற்றுக்கொண்ட DS 04 சான்றிதழ் மற்றும் பிறிதொரு நந்சான்றிதழுடனும் உறுதிப்படுத்த வேண்டும்).

iii. விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்தன்று (2026.11.13) பதவிக்குச் சோந்துக் கொள்வதற்கான சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

09. ஆட்சேர்ப்பு முறை

9.1 திறந்த அடிப்படையிலான விண்ணப்பக்காரர் பொருட்டு

i. தொழில்முறைப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

ii. முதலில், தொழில்முறைப் பரீட்சை நடாத்தி அத்தேர்வில் தேரச்சி பெறும் விண்ணப்பதாரர்களில், வெற்றிட எண்ணிக்கையைப் போல் இருமடங்கினர் கட்டமைக்கப்பட்ட நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

iii. தொழில்முறைத் தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணலில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில், திறமை ஒழுங்குவரிசைக்கு ஏற்ப வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமானவர்கள் தகுதி வரிசைப்படி ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

iv. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்ற ஒரு தேர்வுக் குழுவால் நடாத்தப்படும்.

v. தொழிற் பரீட்சிப்பு

	விடயம்	*உச்ச பள்ளி*	*சித்தியடைவதற்கான புள்ளி*
1	உரிய துறையில் உள்ள ஆரம்பத் தகைமைகள்	20	40%
2	உபகரணங்களை பொருத்துதல், புதுப்பித்தல் தொடர்பான அறிவு	20	
3.	உரிய துறையில் உபகரணங்களின் இடையூறுகளை இனங் காண்பதற்கான அறிவை கொண்டிருத்தல்	40	
4	உரிய துறையில் உரிய உபகரணங்கள பயன்படுத்துதல் தொடர்பான அறிவு	20	
மொத்தம்		100	40%

VI. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

	புள்ளி வழங்கப்படுகின்ற வகுதிகள்	*உச்ச பள்ளி*	*சித்தியடைவதற்கான புள்ளி*
1	மேலதிக கல்வித் தகைமைகள்	15	ஏற்புடையதன்று
2	மேலதிக தொழிற் தகைமை	60	
3	மேலதிக அனுபவம்	10	
4	மேலதிக தகைமை	10	
5	நேர்முகப் பரீட்சையில் காட்டு திறன்	05	
மொத்தம்		100	

(கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது தகைமைகள் பரீட்சிக்கப்படும்)

9.2 மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பக்காரர்கள் பொருட்டு

i. தொழிற் பரீட்சிப்பின் போது சித்தியடையும் புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பக்காரர்களுள் திறமை அடிப்படையில் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

ii. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்ற பரீட்சிப்புக் குழுவினர் தொழிற் பரீட்சை நடாத்தப்படும்.

iii. தொழிற் பரீட்சிப்பு

	புள்ளிகள் வழங்கப்படும் வகுதிகள்	*உச்ச பள்ளி*	*சித்தியடைவதற்கான புள்ளி*
1	உரிய துறையில் உள்ள ஆரம்பத் தகைமைகள்	20	40%
2	உபகரணங்களை பொருத்துதல், புதுப்பித்தல் தொடர்பான அறிவு	20	
3.	உரிய துறையில் உபகரணங்களின் இடையூறுகளை இனங் காண்பதற்கான அறிவை கொண்டிருத்தல்	40	
4	உரிய துறையில் உரிய உபகரணங்கள பயன்படுத்துதல் தொடர்பான அறிவு	20	
மொத்தம்		100	40%

iv. கட்டமைக்கப்பட்ட பரீட்சை : ஏற்றுடையதன்று

10. விண்ணப்பிக்கும் முறை

i. விண்ணப்பம் 21 - 29 செ. மி. அளவிலான A4 கடதாசியின இரிபக்ககங்களையும் பிரயோகித்து மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய தயாரிக்க வேண்டும்.

ii. மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பக்காரர் அலகு தலைவரின்/பிரிவு தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

iii. நேர்முகப் பரீட்சையின் போது அறியத் தரப்பட்டால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

அ). தேசிய ஆளடையாள அட்டை/ ஏற்றுக் கொள்ளத்தக்க கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திரம்

ஆ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

இ). கல்விச் சான்றிதழ்கள்/ தொழிற்தகைமையை காட்டும் சான்றிதழ்கள்/அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

ஈ). அன்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நற்சான்றுப் பத்திரம் 02 (அதில் ஒன்று சுதேச விவகார சுற்றறிக்கை 03/2020 இற்கு அமைய விண்ணப்பக்காரர் வதிவிடப் பிரதேச கிராம அலுவல ஆறு மாதத்திற்குள் பெற்றுக் கொண்ட DS4 சான்றிதழ் ஆக இருத்தல் வேண்டும்).

11. ஏனைய ஒழுங்குவிதிகள்

i. இந்த வர்த்தமானி அறிவிப்பின் விதிகளால் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தன் பணிப்பாளர் நாயகத்திற்கே உரித்தானதாகும்.

ii. பதவி வெற்றிடத்தை நிரப்புவது நிரப்பாமல் விடுவது அல்லது ஒரு பகுதியை மாத்திரம் நிரப்புதல் தொடரிபான இறுதித் தீர்வு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உரித்தானதாகும்.

iii. இந்த வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசங்களுக்கு இடையே ஏதேனும் பொருந்தாத் தன்மை அல்லது முரண்பாடு ஏதும் எழுமிடத்து சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

iv. விண்ணப்பக்காரர் ஒருவர் ஆரம்ப தகைமைகளை கொண்டிராமை தெரியவரின் அறியத் தாரமலேயே அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

v. விண்ணப்பக்காரர் சமரப்பித்துள்ள ஏதேனும் ஒரு விடயம் போலி என தெரிந்தும் சமர்ப்பித்துள்ளமை தெரியவந்தால், அவ்வாறின்றேல் ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தினை அவர் வேனுமென்றே மறைத்திருந்தமை தெரியவரின் அவரது விண்ணப்பத்தை நிரகாரிப்பு செய்தல்/ நியமனம் முடிவுறுத்தப்படும்.

டாக்கடர். பீ. எஸ். எஸ். பெரோ,
பணிப்பாளர் நாயகம் (க/பா),
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்.

மாதிரி விண்ணப்பம்

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் ஆரம்ப தரத்தின் அரை தொழில்நுட்ப சேவை வகுதியின் III ஆம் தரத்தில்ஆய்வுகூட உதவுநர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் (திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட)

(அலுவலக உபயோகத்திற்காக)

விண்ணப்பிக்கும் மொழி மூலத்திற்கு உரிய இலக்கத்தை அடைப்பினுள் குறிப்பிடுக
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)

விண்ணப்பிக்கின்ற வகுதிக்கு உரிய இலக்கத்தை அடைப்பினுள் குறிப்பிடுக
(திறந்த - 05, மட்டுப்படுத்தப்பட்ட - 06)

01. (i) முழுப் பெயர் (திரு. திருமதி/ செல்வி): .....
.....

(ii) முழுப் பெயர்ஆங்கிலத்தில் (ஆங்கில பேரெழுத்துக்களில்): .....
.....

02. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு. /திருமதி/ செல்வி) (ஆங்கில பேரெழுத்துக்களில்)
உ + ம் : BANDARA.A.B
.....
.....

03. நிரந்தர முகவரி (நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதம் அனுப்புவதற்கான):
.....
.....

04. ஆண்/ பெண்: (ஆண் - 1, பெண் - 2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

05. விவாகமானவர்/ விவாகமாகாத: (விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2, ஏனைய - 3)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

06. இனம்: சிங்களம் - 1, தமிழ் - 2 இந்தியத் தமிழ் - 3, முள்ளிம் - 4, ஏனைய - 5
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

07. தே. அ. அ. இலக்கம்:

08. தொலைபேசி இலக்கம்:

கையடக்க :

நிலையான :

09. (அ)பிறந்த திகதி:

ஆண்டு: மாதம்: திகதி:

(ஆ) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி அன்று (2026.11.13) வயது:

வருடங்கள்: மாங்கள்: நாட்கள்:

10. கல்வித் தகைமைகள்

(அ) I. சாதாரண தரம் (முதலாவது தடவை) - முதலாவது அமர்வு - வருடம் .....

பாடங்கள்	பெற்ற தரம்

(ஆ) II. சாதாரண தரம் (இரண்டாவது தடவை) - இரண்டாவது வருடம் - வருடம் .....

பாடங்கள்	பெற்ற தரம்

(ஆ) உயர் தரம் (சித்தயடைந்திருந்தால்) - வருடம் : ..... பாடப்பிரிவு : .....

பாடங்கள்	பெற்ற தரம்

11. தொழிற் தகைமை :

தொழிற் தகைமையை பெற்ற நிறுவனம்	NVQ மட்டம்

12. அனுபவம்:

அனுபவத்தை பெற்ற நிறுவனம்	அனுபவத்திற்குரிய சேவைக்காலம்

13. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகுதிகளுடன் தொடர்புடைய பின்வரும் ஆவணங்களின் நிழற் பிரதிகளை தம்மால் சான்றுபடுத்தி பின்வரும் ஒழுங்குமுறைக்கு அமைய தயார் செய்து விண்ணப்பத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

I. கல்விச் சான்றிதழ்கள்
II. தொழிற் தகைம சான்றிதழ்கள்
III. அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்கள்
IV. பிறப்புச் சான்றிதழ்
V. செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/ செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம்

14. விண்ணப்பகாரரது உறுதியுரை

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன் மூலம் சான்றளிக்கிறேன். இதில் உள்ள ஏதேனும் தகவல் எனது தேர்வுக்கு முன் போலியானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், நான் தகுதி நீக்கத்திற்கு ஆளாக நேரிடும் என்பதையும், நியமனத்திற்குப் பிறகு அவ்வாறு இருப்பது கண்டறியப்பட்டால், இழப்பீடு இல்லாமல் பணிநீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். எந்தவொரு நீதிமன்றத்தாலும் நான் எந்தவொரு குற்றவியல் குற்றத்திற்கும் தண்டனை பெறவில்லை என்பதை எனது வழக்கமான கையொப்பத்துடன் இதன் மூலம் சான்றளிக்கிறேன்.

.....
விண்ணப்பகாரரது கையொப்பம்

திகதி : .....

15. விண்ணப்பகாரரது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல்

(அரச பதவிநிலை உத்தியோகத்தரினால்/ நிறைவேற்று உத்தியோகத்தரினால்/ கிராம அலுவல சான்றுப்படுத்த வேண்டும்)

இங்கு கையொப்பமிட்டுள்ள ..... இல் வதியும், திரு./திருமதி/ செல்வி .....என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை .... ஆம் திகதி அன்று என் முன்னிலையில் இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

....
திகதி சான்றுப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ இலட்சனை

சான்றுப்படுத்துபவரின் பெயர் : .....
பதவி : .....
முகவரி : .....
திகதி : .....

16. திணைக்கள/ நிறுவன தலைவரினது பரிந்துரை

(தற்போது கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் நிர்ந்தர பதவி ஒன்றினை வகிக்கும் விண்ணப்பகாரருக்கு மாத்திரம் ஏற்புடையது)

இத்திணைக்களத்தில் ..... பிரிவில் .....
கடமையாற்றுகின்ற
திரு./ திருமதி/செல்வி ..... என்பவர் தற்போது ..... பதவியில் சேவை புரிகின்றார் என்றும், அவரது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது என்றும், எத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படவில்லை எனவும், ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள கருதப்படவில்லை என்றும், சான்றளிக்கின்றேன். அவர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

.....
கையொப்பம் உத்தியோகபூர்வ இலட்சனை

திகதி : .....

10 - 537

பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்
இலங்கை வெளிநாட்டுச் சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

2026, செத்தெம்பர் 04 எனத் திகதியிட்ட 2505 ஆம் இலக்க வர்த்தமானியில் "இலங்கை வெளிநாட்டுச் சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிவித்தலானது, இதன் மூலம் பின்வருமாறு திருத்தப்படுகிறது :

I. மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் இலக்கத்தின் கீழ் "வயது" தொடர்பான பந்திகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :

"விண்ணப்பதாரர் 2026.10.06 அன்று இருபத்திரண்டு (22) வயதுக்குக் குறையாதவராகவும், முப்பத்தைந்து (35) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும், (அதற்கிணங்க, விண்ணப்பதாரரின் பிறந்த திகதி 1991.10.06 அன்று அல்லது அதற்குப் பின்னருமான, அதேவேளையில் 2004.10.06 அன்று அல்லது அதற்கு முன்னரும் அமைந்திருந்தால் மட்டுமே வயதெல்லை நிபந்தனை பூர்த்தியாகும்).

ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் நாற்பது (40) வயதுடையவர்களாக இருக்க வேண்டும் (இதன்படி, 1986.10.06 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்) என்பதுடன், திருப்திகரமான பணிப் பதிவைக் கொண்டிருக்க வேண்டும்.

II. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி இதன் மூலம் 2026.10.30 வரை நீடிக்கப்படுகிறது. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதானது, 2026, ஒற்றோபர் 19 அன்று காலை 9.00 மணிக்குத் தொடங்கி, 2026 ஒற்றோபர் 30 அன்று இரவு 9.00 மணிக்கு நிறைவடையும்.

மேற்கூறிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து விதிகளும் மாற்றமின்றி தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். அத்துடன் தகுதிகளைச் சரிபார்ப்பதற்கான திகதியும் 2026.10.06 என்றவாறே மாற்றமின்றி இருக்கும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்க.

செயலாளர்
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
2026, ஒற்றோபர் 19

10 - 717

தெசைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I பொருட்டான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2017(2026)

Second Efficiency Bar Examination for Grade 1 Statistical Officers in the Department of Census & Statistics -2017(2026)

01. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் 1 பதவிக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல்பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் 2027, சனவரி மாதத்தில்நடாத்தப்படுமென இத்தால்அறிவிக்கப்படுகிறது. விண்ணப்பப்படிவம்இலங்கைப்பரீட்சைகள்திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையதளத்தில் 'Our Service' என்ற பிரிவில் 'இணைய விண்ணப்பங்கள் – 'Online Applications – Recruitment Exams/E.B. Exams' என்ற பிரிவில் கிடைப்பதுடன், விண்ணப்பங்களை இணையவழியூடாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இணையவழியூடாக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 2026 ஒற்றோபர் மாதம் 19ஆந் திகதி காலை 09.00 மணிக்குத் தொடங்கி, 2026 நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி இரவு 09.00 மணிக்கு முடிவடையும். விண்ணப்பம் இணையவழியூடாக வெளியிடப்பட்டதும், அதைப் பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியின் தொடர்புடைய பிரிவுகளை கையால் நிரப்பி, விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன் விண்ணப்பத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

- குறிப்பு:
  இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைத் தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

02. (i) இப் பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

03. பரீட்சைக் கட்டணம் :

பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது தனித்தனியாக தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு ரூபா 250/- பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். பரீட்சைக் கட்டணங்களை இணையவழியூடாக வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகள் மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.

i. எந்தவொரு வங்கி கிரெடிட் கார்டு மூலமாகவும் (Any Bank Credit Card)
ii. இணைய பரிவர்த்தனை வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கி டெபிட் கார்டு மூலமாகவும்; (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் ஒன்லைன் வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank / “Flex” App of Ceylon)
iv. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளை மூலமாகவும் (Any Branch of Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேற்கண்ட முறைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்துவது குறித்த அறிவுறுத்தல்கள் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்படவேண்டும், மேலும் பரீட்சைக் கட்டணத்தை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கண்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும்போது ஏற்படும் எந்தவொரு பிழைகளுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பாகாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தக் காரணத்திற்காகவும் திரும்பப் பெறப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ முடியாது.

(ஈ) முன்னைய பரீட்சையொன்றுக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து, பரீட்சை அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர், ஏதேனும் காரணத்தினால் பரீட்சைக்குத் தோற்றாமல் இருந்திருந்தாலும், அவ்விண்ணப்பதாரர்கள் இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். முதன்முறையாகப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதாகத் தவறாகக் குறிப்பிட்டு, கட்டணம் செலுத்தாமல் இப்பரீட்சைக்குத் தோன்றி, பின்னர் அது கண்டறியப்பட்டால், அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் ஏற்படும் பாதகமான விளைவுகளை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே பொறுப்பேற்று ஏற்றுக்கொள்ள வேண்டும்.

04. இணையவழி மூலமான (online) பரீட்சை விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் இணையவழி மூலமாக சமர்ப்பித்த மென் பிரதியையும் பதிவுத்தபாலில் அனுப்பிய அச்சுப்பிரதியையும் பரீட்சைகள் திணைக்களம் பெற்றுக்கொண்டதும், மென் பிரதி மற்றும் அச்சுப்பிரதி சரிபார்க்கப்பட்டு, திணைக்களத்தால் செல்லுபடியாகும் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வது/ஏற்றுக்கொள்ளாதது குறித்த அறிவிப்பு முறைமையை அணுகப் பயன்படுத்தப்படும் கைத் தொலைபேசி இலக்கத்திற்கு (SMS) வழியாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ அனுப்பப்படும். இணையவழி மூலமான விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்களைப் பதிவிறக்கவும். விண்ணப்பத்தை நிரப்பும்போது இந்த அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்றவும். அச்சுப் பிரதியைப் பெற்ற பின்னர் விண்ணப்பத்தில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாக கருதப்படாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

05. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு

III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

05.1 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது காணப்பட்ட பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன், விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அதுதொடர்பில் இடம்பெறும்; மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

05.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலொருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

05.3 பரீட்சை தினத்தன்று தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

06. இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் முதல்முறையாக பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்றவகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் செலுத்தப்பட மாட்டாது.

07.1 இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழிமூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும், போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரசசேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழிமூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

07.2 பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் 40% ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் அடங்கிய ஆவணமொன்று பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பெறுபேறுகளை பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்டரீதியில் அறிவிக்க மாட்டார். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

09. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. பரீட்சைப் பாடத்திட்டம்

மேற்படி பதவிக்கு உரிய பரீட்சை கீழ் குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும்.

பாடம்	*நேரம்*	*புள்ளிகள்*	*சித்திப் புள்ளிகள்*
அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும்	02 மணி.	100	40%
1. நிதி ஒழுங்குவிதிகள்	02 மணி.	100	40%

	வினாப் பத்திரம்	பாடத்திட்டம்
1	அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும்;	இதன் பொருட்டு தாபன விதிக்கோவையின் XV,XVI,XXIII,XXIV,XXV,XXVII, XXVIII,XXX, XXXIII, XLVII, XLVIII ஆகிய அதிகாரங்களையும் அவ்வதிகாரங்கள் மீதும் திருத்தஞ்செய்யப்பட்ட சுற்றறிக்கைகள் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும். வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை. ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும்.
2	நிதி ஒழுங்குவிதிகள்;	இது நிதி ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிட்ட அதிகாரங்களை உள்ளடக்கும்.
		அ) அத்தியாயம்VI - பொது நிதியின் கட்டுக்காப்பு, அக்கறைத்தொகை, வங்கி கணக்குகள். பகுதி 1 - பொது நிதியின் கட்டுக்காப்பு மற்றும் பாதுகாப்பு. பாகம் 2 – அடிக்கட்டை புத்தகம் பகுதி 3 - நாணயம், முத்திரைகள் போன்றவற்றின் சுற்றாய்வுச் சபை பகுதி 4 – அக்கறைத்தொகை பகுதி 5 - வங்கி கணக்குகள் (நிதி ஒழுங்கு விதிகள் 315 முதல் 396 வரை மற்றும் அவற்றின் அனைத்து திருத்தங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.) ஆ) கொள்முதல் வழிகாட்டல்கள் 2006 - கொள்முதல் செயன்முறை மற்றும் பொருட்கள் மற்றும் வேலையின் கீழ் உள்ள அனைத்து திருத்தங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். { அத்தியாயம் XIII - வேலை மற்றும் சேவைகளை வழங்குவதற்கான கொள்முதல் செயன்முறை, பண்டகசாலை கணக்கெடுப்பு, பண்டகசாலை செயன்முறை, ஒப்பந்தம், கேள்விப்பத்திர நடைமுறையிலிருந்து விலகல் (நிதி ஒழுங்கு விதிகள் 708 முதல் 775 வரை) வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை. ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும்.

குறிப்பு –

- மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.
- குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படுதலாகாது.

12. இவ் வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த வேறு ஏதேனும் விடயம் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,

'சங்கியான மந்திரய',
306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

10 - 638

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திரன்காண் தடைப் பரீட்சை – 2017(2026)

First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census & Statistics -2017(2026)

01. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் 2027 சனவரி மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது. விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையதளத்தில் ' Our Service ' என்ற பிரிவில் “Online Applications – Recruitment Exams/E.B. Exams” என்ற பிரிவில் கிடைப்பதுடன், விண்ணப்பங்களை இணைவழியூடாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இணையவழியூடாக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 2026, ஒற்றோபர் 19ஆந் திகதி காலை 09.00 மணிக்குத் தொடங்கி, 2026, நவெம்பர் 13ஆந் திகதி இரவு 09.00 மணிக்கு முடிவடையும். விண்ணப்பம் இணையவழியூடாக வெளியிடப்பட்டதும், அதைப் பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியின் தொடர்புடைய பிரிவுகளை கையால் நிரப்பி, விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன் விண்ணப்பத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.
குறிப்பு:
இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைத் தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

02. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

03. பரீட்சைக் கட்டணம் : பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது தனித்தனியாக தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு ரூபா 200/- பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். பரீட்சைக் கட்டணங்களை ஒன்லைன் முறைமையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகள் மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.

i. எந்தவொரு வங்கி கிரெடிட் கார்டு மூலமாகவும்
ii. இணைய பரிவர்த்தனை வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கி டெபிட் கார்டு மூலமாகவும்
iii. இலங்கை வங்கியின் ஒன்லைன் வங்கி “Flex” முறை மூலம்

iv. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளை மூலமாகவும்

குறிப்பு:

(அ) மேற்கண்ட முறைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்துவது குறித்த அறிவுறுத்தல்கள் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டண பற்றுச்சீட்டு SMS அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்படவேண்டும், மேலும் பரீட்சைக் கட்டணத்தை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கண்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும்போது ஏற்படும் எந்தவொரு பிழைகளுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பாகாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தக் காரணத்திற்காகவும் திரும்பப் பெறப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ முடியாது.

04. இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் இணையவழியூடாக சமர்ப்பித்த மென் பிரதி விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வது/ஏற்றுக்கொள்ளாதது குறித்த அறிவிப்பு முறைமையை அணுகப் பயன்படுத்தப்படும் கைத் தொலைபேசி இலக்கத்திற்கு SMS வழியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்களைப் (Instructions) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பத்தை நிரப்பும்போது இந்த அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்றவும். அச்சுப் பிரதியைப் பெற்ற பின்னர் விண்ணப்பத்தில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாக கருதப்படாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

05. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை ஒன்லைன் வழியாக வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இணைய அறிவிப்பு/ குறுஞ்செய்தி மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அதை அறிவிக்கும். ஒரு விண்ணப்பதாரருக்கு தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை என்றால், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தாபனக் கிளையில் அது குறித்து விசாரிக்க வேண்டும். அத்தகைய விசாரணைகளை மேற்கொள்ளும்போது, விண்ணப்பதாரர் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இல. மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அத்தகைய விசாரணையின் போது பரீட்சைத் திணைக்களத்தால் கோரப்படும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்த, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்/பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு, ஏற்புடையதாயின், அதன் புகைப்பட பிரதியையும், விண்ணப்பத்தின் அஞ்சல் பதிவு பற்றுச்சீட்டையும் வைத்திருப்பது நல்லது.

06.1 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது காணப்பட்ட பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன், விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அதுதொடர்பில் இடம்பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

06.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலொருவரைக்கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

06.3 பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

07. இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் முதல்முறையாக பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்றவகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் செலுத்தப்பட மாட்டாது.

08.1 இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழிமூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும், போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரசசேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழிமூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

08.2 பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி அளவு 40% ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் அடங்கிய ஆவணமொன்று பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பெறுபேறுகளை பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்டமுறையில் அறிவிக்க மாட்டார். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

09. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்**

மேற்படி பதவிக்கு உரிய பரீட்சை கீழ் குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும்.

வினாப்பத்திரம்	*நேரம்*	*மொத்தப் புள்ளிகள்*	*சித்திப் புள்ளிகள்*
1. அடிப்படைப் புள்ளிவிபர முறைகள்;	02 மணி.	100	40%
2. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும்	02 மணி	100	40%
3. நிதி ஒழுங்குவிதிகள்	02 மணி.	100	40%

	வினாப் பத்திரம்	பாடத்திட்டம்
1	அடிப்படைப் புள்ளிவிபர முறைகள்	தரவு சேகரித்தல், சமர்ப்பித்தல், t பரம்பல், சாதாரண பரம்பல், t கருதுகோட் சோதனை கோட்பாடுகளும் X^2 சோதனையும், இழைவரையம் மற்றும் மீடிறன் வளையி, மத்திய சார்பும், பிரிகை அளவுகளும் (ஆகாரம், இடையம், இடை) மாறற்றிறன், காலணை, நியம விலகல், மாதிரியெடு நுட்ப தத்துவங்கள், மாதிரியெடு அளவீடு, மாதிரியெடுப்பு வழு, மாதிரியெடுப்பல்லா வழு. சுட்டெண்கள், எளிய இணைபு, ஏகபரிமாணப்; பிற்செலவு, அடிப்படைப் புள்ளிவிபர அறிவு வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும்.

	வினாப் பத்திரம்	பாடத்திட்டம்
2	அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும்	2. இதன் பொருட்டு தாபன விதிக் கோவையின் அத்தியாயங்கள்: II, III, IV, V, VIII, XII, XIII, XIV, XIX மற்றும் மேற்படி அத்தியாயங்களுக்கான திருத்தப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் பின்பற்றப்பட வேண்டும். வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும்.
3	நிதி ஒழுங்குவிதிகள்	இது நிதி ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கும். 1ம் அதிகாரம் - வருமான செலவின மதிப்பீடு, திரட்டிய நிதியம், வருடாந்த மதிப்பீடு, வருடாந்த மதிப்பீட்டை மாற்றுதல்(நி.ஒ. 1 - 68 வரை) IIIம் அதிகாரம் - நிதி முகாமையும் பொறுப்புடைமையும், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், வருமானக் கணக்கு உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளுக்கு அதிகாரம் வழங்குதல், அங்கீகாரமளித்தல், சான்றுப்படுத்தல், வேலைகளைக் குறித்தொதுக்குதல்(நி.ஒ. 124 - 147 வரை) வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை. ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும்.

குறிப்பு –
மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.

குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படுதலாகாது.

12. இந்த வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,

'சங்கியான மந்திரய',
306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

10 - 637

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய 2,500 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் 2026.08.28 ஆந் திகதிய 2,504 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் வெளியிடப்பட்ட "இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" தொடர்பான அறிவித்தல் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

I. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 7 (இ) வயது தொடர்பான பந்தி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.
அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிபவர்களுக்கான அதிகபட்ச வயது எல்லை 40 வயதாகும், (அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டு தண்டனை பெற்றிருக்கக் கூடாது.)

III. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.10.23 வரை நீடிக்கப்படுகின்றது மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களும் அவ்வாறே நடைமுறையில் இருக்கும் என்பதுடன், தகைமைகள் பரிசீலிக்கப்படும் திகதியும் 2026.08.31 ஆந் திகதியாகவே மாற்றமின்றித் தொடரும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்.

செயலாளர்,

நிதி. திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு - 01,
2026, ஒற்றோபர்

10 - 690

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை கோரல் - 2026

2023-ஆம் ஆண்டின் 9-ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26(1) பிரிவின்படி, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முதன்மை நிலை (தொழில்நுட்பம் சாராத) தரம் III முகாமைத்துவ உதவியாளர் பணியிடங்களில் உள்ள 55 வெற்றிடங்களை நிரப்ப இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. ஆட்சேர்ப்புக்கு அவசியமான தகைமைகள்:-

1.1 கல்வித் தகைமைகள் : க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத வகையில் (சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமை சித்திகளுடன்) நான்கு திறமை சித்திகள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்).
மற்றும்
க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் (பொது சாதாரண பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். (பழைய பாட பரப்பின் கீழ் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் போதுமானது)

1.2 தொழில் சார் தகைமைகள்: ஏற்புடையதல்ல

1.3 அனுபவம்: ஏற்புடையதல்ல

1.4 உடல் சார் தகைமை: ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடன் இருத்தல் வேண்டும்.

1.5 ஏனையவை :

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித்திகதியன்று, விண்ணப்பதாரிகள் பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகைமைகள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

2. வயதெல்லை :

ஆகக் குறைந்த எல்லை: 21 வருடங்கள்
உச்ச எல்லை: 35 வருடங்கள்

3. சம்பளத் திட்டம்:- ரூபா 46,220.00- 10x540 - 7x630 - 4x890 - 20x1190 - ரூபா 83,390.00

அதன்படி, இந்தப் பதவிக்கான சம்பளக் குறியீடு AC-MA-1-2025 மற்றும் ஆரம்பச் சம்பளப் படிநிலை ரூபா. 46,220/- ஆகும். மேலும், 2026.03.17 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட, இப்பதவிக்குப் பொருந்தக்கூடிய இதர படிகளும் வழங்கப்படும். (இலக்கம் 2504/07 மற்றும் 2026.09.01 ஆந் திகதியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவிப்பில் உள்ளடக்கப்பட்ட படிகள் ஆகும்)

4. ஆட்சேர்ப்பு முறை :- 100 வீதம் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

4.1 எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வினை உள்ளடக்கியது.

4.1.1 எழுத்து மூலப் பரீட்சை:

எழுத்து மூலப் பரீட்சை இரு வினாத்தாள்களை கொண்டது. பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக அமைப்பினால் கொழும்பில் நடாத்தப்படும்.

பாடம்	*நேரம்*	*உச்சப் புள்ளிகள்*	*சித்திப்புள்ளிகள்*
மொழித்தேர்ச்சி	02 மணித்தியாலம்	100	40
பொது விவேகம்	02 மணித்தியாலம்	100	40

பரீட்சை தொடர்பான விபரங்கள் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான பாடத்திட்டம்:

வினாத்தாள்	*பாடத்திட்டம்*
மொழித் திறன்	பரீட்சார்திகள் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்துதல், புரிந்துகொள்ளுதல், எழுத்தாக்கம், மொழியும் கட்டுரையாக்கமும், வாக்கிய அமைப்பு, படைப்பாக்கம், வரைபடங்கள், அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கமாகக் வெளிப்படுத்துதல் போன்ற திறன்களை அளவிடுதல்.
பொது விவேகம்	பரீட்சார்தியின் பகுத்தறியும் திறனை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு வினாத்தாள்.

பரீட்சை மொழி மூலம்:

- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்
- பரீட்சார்திகள் தாங்கள் விரும்பும் ஏதேனும் ஒரு மொழியில் மட்டுமே தேர்வில் கலந்துகொள்ளலாம். அதுவே தேர்வுக்குரிய மொழியாக கருதப்படும். (விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்ற பரீட்சார்திகளுக்கு அனுமதி இல்லை.)

ஒவ்வொரு பரீட்சார்திகளும் இரண்டு வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

4.1.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு:

மதிப்பெண்கள் வழங்கப்படும் முக்கிய விடயங்கள்	*உச்சப்புள்ளிகள்*	*தெரிவுக்குப் பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள்*
மேலதிக கல்வித் தகைமைகள்	20	60
சேவை அனுபவம்	15	
ஆங்கில மொழித் தேர்ச்சி மற்றும் கணனி அறிவு	10	
விடயம் தொடர்பிலான அறிவு	25	
நேர்முகத்தேர்வில் வெளிப்படுத்தப்படும் திறன்கள்	30	
மொத்தப் புள்ளிகள்	100	

குறிப்பு:

i. எழுத்து மூல பரீட்சையில் கலந்துகொண்ட அனைத்து விண்ணப்பதாரர்களிலிருந்தும், தகைமை பெற்றவர்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். ஒவ்வொரு வினாத்தாளிலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து, நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போல் மூன்று மடங்கு அல்லது ஆணைக்குழு அவ்வப்போது தீர்மானிக்கும் எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பதாரர்கள் எழுத்து மூல பரீட்சையில் பெற்ற புள்ளிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் குழுவிற்கு வழங்கப்படாது.

ii. ஆட்சேர்ப்பின் போது, மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, முக்கியப் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட அதிகபட்ச புள்ளிகள் உள்ளடக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்கான விரிவான புள்ளி திட்டத்தை அங்கீகரித்தல் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும்.

iii. எழுத்து மூல பரீட்சையில் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் பெற்ற புள்ளிகளின் மொத்தத்தில் மிக உயர்ந்த தகைமையைக் காட்டும் விண்ணப்பதாரர்கள், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

5. சேவையில் உள்ளீர்ப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:-

i. இந்த நியமனம், ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, 2026.09.01 திகதியிட்ட 2504/07 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டது.

ii. இந்தப் பதவி நிரந்தரமானது. ஊழியர் சேம நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி நலன்கள் உரித்தானது.

iii. இந்த நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

iv. ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பணிக்கமர்த்தப்பட்ட 3 வருடங்களுக்குள் செயல்திறன் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

v. தகுதிகாண் காலத்தின் முடிவில், திருப்திகரமான பணி, வருகை, நடத்தை மற்றும் செயலாற்றுகை தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பணி நிரந்தரமாக்கப்படும்.

vi. ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின்படி, உங்கள் செயலாற்றுகை தரம் ஆண்டுதோறும் மதிப்பீடு செய்யப்படும். அதன்படி, எதிர்கால சம்பள உயர்வுகள் வழங்கப்படும், மேலும் அந்த செயலாற்றுகை தரம் பதவி உயர்வுகளுக்கும் பயன்படுத்தப்படும்.

vii. அரச கரும மொழி அல்லாத வேறு பயிற்று மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகள், தகுதிகாண் காலத்தில் அரச கரும மொழியில் பரிந்துரைக்கப்பட்ட தேர்ச்சியைப் பெற வேண்டும்.

viii. 2023-ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச்சட்டம், 2026.09.01 ஆம் திகதியிடப்பட்ட இல. 2504/07 வர்த்தமானி அறிவித்தலில் உள்ளீர்க்கப்பட்டுள்ள இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விதிகள், தாபன விதிகள் கோவை பாகம் III, நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அவ்வப்போது வெளியிடப்படும் விதிகள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கு இந்த நியமனம் உட்பட்டது.

ix. பரீட்சையானது சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். பரீட்சார்தி, தாம் விரும்பும் ஏதேனும் ஒரு மொழியில் மட்டுமே பரீட்சையில் கலந்துகொள்ள வேண்டும்.

x. விண்ணப்பித்த மொழி மூலத்தை மாற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படாது. மேலும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழியே நியமனம் பெறத் தகுதியுடையவராக இருப்பீர்கள்.

6. விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :-

i. அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

ii. எழுத்து/கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் தங்களின் ஆளடையாளத்தை நிரூபிக்க, பின்வரும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

a) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை
b) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
c) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

7. பரீட்சைக் கட்டணம் :- பரீட்சைக் கட்டணம் ரூபா: 1000.00 ஆகும். இந்தக் கட்டணத்தை, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளை கணக்கு இலக்கம் : 92603543 இற்கு செலுத்த வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எந்தக் காரணத்திற்காகவும் மீள திருப்பிக் கையளிக்கப்படாது. கட்டணம் செலுத்திய பிறகு பெறப்பட்ட பற்றுச்சீட்டை இந்த விண்ணப்பப் படிவத்தில் ஒட்டுதல் வேண்டும், மேலும் அதன் நகலை எதிர்காலப் பயன்பாட்டிற்காக வைத்துக்கொள்ளல் வேண்டும்.

8. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:

i. விண்ணப்பங்களை, பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, தபால் பெட்டி இல. 1431, 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு, 2026.11.16 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவுடைய தாளில் தயாரித்து ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

iii. விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது மேல் மூலையில் "முகாமைத்துவ உதவியாளர் தரம் III-க்கான ஆட்சேர்ப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு / முப்படையைச் சேர்ந்த ஆணை பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது அரசாங்க அல்லது மாகாணப் பொதுச் சேவையில் நிரந்தரப் பதவியில் இருந்து, மாதம் ரூபா. 71,240/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் ஒரு அதிகாரியால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

v. தபாலில் தொலைந்துவிட்டதாகவோ அல்லது தபாலில் தாமதமாகிய விண்ணப்பங்கள் குறித்த முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

vi. விண்ணப்பத்துடன் பின்வரும் ஒவ்வொரு ஆவணத்தினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றும் இணைக்கப்படல் வேண்டும், வேறு எந்த ஆவணங்களும் இணைக்கப்படக் கூடாது.

a) தேசிய அடையாள அட்டையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி
b) பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி
c) மேலே விண்ணப்பித்த அடிப்படை கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள்
d) பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு

குறிப்பு: விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை சரிபார்ப்பதற்காக, நேர்முகத்தேர்வின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. தவறான தகவல்களை வழங்குதல்.

ஆட்சேர்ப்புக்கு முன்னர் உங்கள் விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் தவறானது அல்லது பிழையானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் பரீட்சார்தி தகுதி ரத்து செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பிறகு அத்தகைய தவறான அல்லது பிழையான தகவல் கண்டறியப்பட்டால், தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு உங்களைப் பணியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புவது/நிரப்பாமல் விடுவது குறித்த இறுதி முடிவு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

11. ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முடிவே இறுதியானது.

12. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது வேறுபாடு இருப்பின், சிங்கள உரையே மேலோங்கும்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஆர்.எஸ்.ஏ. திசாநாயக்க,
பணியாளர் நாயகம்,

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
தபால் பெட்டி இல. 1431,
36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2026.10.

(அலுவலக பாவணைக்கு மட்டும்)

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பப்படிவம் - 2026

மொழி	
சிங்களம்	
தமிழ்	
ஆங்கிலம்	

(விண்ணப்பப்படிவத்தை ஆங்கில பெரிய எழுத்துக்களில் நிரப்புதல் வேண்டும்)

1.0	1.1. முழுப் பெயர்	
	1.2. முழுப் பெயர் (சிங்களம் / தமிழ்)	
	1.3. முதலெழுத்துக்களுடன் பெயர்	
2.0	2.1. நிரந்தர முகவரி	
	2.2 கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி	
	2.3. மாவட்டம்	
	2.4. மாகாணம்	
3.0	3.1. பாலினம் ஆண்/பெண்	
	3.2. தேசிய அடையாள அட்டை இல.	
4.0	4.1. கையடக்க தொலைபேசி இல. வட்ஸ்அப்	
	(whatsapp) இல.	
	4.2. நிரந்தர தொலைபேசி இல.	
	4.3. மின்னஞ்சல் முகவரி	
5.0	5.1. பிறந்த திகதி	
	5.2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியில் வயது	வருடங்கள்: மாதங்கள்: நாட்கள்:
6.0	6.1. திருமணமானவர் / திருமணமாகாதவர்	
7.0	இனம்	
8.0	மதம்	

9.0 கல்வித் தகைமைகள்: மொழி மூலம்: .....

க. பொ. த. (சாதாரண தரம்) வருடம் : ..... பரீட்சை சுட்டெண்:			
பாடம்	தரம்	பாடம்	தரம்

க. பொ. த. (உயர் தரம்) வருடம் : ..... பரீட்சை சுட்டெண்:			
பாடம்	தரம்	பாடம்	தரம்

10.0 சேவை அனுபவம்:-

நிறுவனம்	காலம் (ஆண்டுகள்)

11.0 மேலதிக கல்வித்தகைமைகள்: (ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதிகளுக்கு அப்பாற்பட்ட கல்வித் தகைமைகள்):

பரீட்சை / பாடநெறி	*நிறுவனம்*	*பெறுபேறு*

12.0 ஆங்கில மொழி நிபுணத்துவம் :

தகைமையை அத்தாட்சிப்படுத்தும் வகையில் முன்வைக்கப்படும் ஆவணம்
1.
2.
3.

13.0. கணினி தேர்ச்சி மட்டம்:

பாடநெறி	*நிறுவனம்*	*காலப்பகுதி*

14.0 வேறு தகைமைகள் :-

……
……

15.0 நீங்கள் எப்போதாவது ஏதாவது குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளீர்களா?

ஆம்	
இல்லை	

(ஆம் எனில், விவரமாக குறிப்பிடவும்)

……
……

16.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு விபரங்கள்:-

செலுத்திய கட்டணம் …… திகதி ……
(பற்றுச் சீட்டு கலறாதவாறு இங்கு ஒட்டவும்.)

17.0 விண்ணப்பதாரரின் உறுதிமொழி:

இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள், எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன். ஆட்சேர்ப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் ஒன்று தவறானது அல்லது துல்லியமற்றது எனக் கண்டறியப்பட்டால், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு எனது பரீட்சார்தி தகுதியை/அல்லது நியமனத்தை இரத்து செய்யும் உரிமையைக் கொண்டுள்ளது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக் கட்டுப்படவும், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி நான் தகுதியற்றவன் எனக் கண்டறியப்பட்டால், ஆட்சேர்ப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ எனது பரீட்சார்தி தகுதியை/அல்லது நியமனத்தை இரத்து செய்ய எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் உட்படுவதற்கும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

.....
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:.....

18. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

இந்த விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், ... அன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்றும் இதன்மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

.....
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் அலுவலக முத்திரை

கையொப்பத்தைச் உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :-.....
.....
பதவி :-.....
முகவரி :-.....
திகதி :-.....

10 - 656/1

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அலுவலக உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை கோரல் - 2026

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின்படி, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முதன்மை நிலை (தொழில்நுட்பம் சாராத) தரம் III அலுவலக உதவியாளர் பணியிடங்களில் உள்ள 85 வெற்றிடங்களை நிரப்ப இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. ஆட்சேர்ப்புக்கு அவசியமான தகைமைகள்:-

1.1 கல்வித் தகைமைகள் : ஆறு பாடங்களில் இரண்டு சிறப்புத் சித்திகளுடன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

1.2 தொழில் சார் தகைமைகள்: ஏற்புடையதல்ல

1.3 அனுபவம்: ஏற்புடையதல்ல

1.4 உடல் சார் தகைமை: ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடன் இருத்தல் வேண்டும்.

1.5 ஏனையவை : I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்;

II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித்திகதியன்று, விண்ணப்பதாரிகள் பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகைமைகள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

2. வயதெல்லை :-

ஆகக் குறைந்த எல்லை: 21 வருடங்கள்
உச்ச எல்லை: 32 வருடங்கள்

3. சம்பளத் திட்டம்:- ரூபா 40,500.00-10X450-10X490-7X540-15X590-ரூபா 62,530.00

அதன்படி, இந்தப் பதவிக்கான சம்பளக் குறியீடு AC-PL-1-2025 மற்றும் ஆரம்பச் சம்பளப் படிநிலை ரூபா. 40,500.00 ஆகும். மேலும், 2026.03.17 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட, இப்பதவிக்குப் பொருந்தக்கூடிய இதர படிகளும் வழங்கப்படும். (இலக்கம் 2504/07 மற்றும் 2026.09.01 ஆந் திகதியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவிப்பில் உள்ளடக்கப்பட்ட படிகள் ஆகும்)

4. ஆட்சேர்ப்பு முறை :- 100 வீதம் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

4.1 எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வினை உள்ளடக்கியது.

4.1.1 எழுத்து மூலப் பரீட்சை:
இரு வினாத்தாள்களை கொண்டது. பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

பாடம்	*நேரம்*	*உச்சப் புள்ளிகள்*	*சித்திப்புள்ளிகள்*
பொது அறிவு	1 ½ மணித்தியாலம்	100	40
பொது விவேகம்	1 ½ மணித்தியாலம்	100	40

பரீட்சைக்கான பாடத்திட்டம்:

வினாத்தாள்	*பாடத்திட்டம்*
பொது அறிவு	இலங்கையின் அரசியல், சமூக-பண்பாட்டு மற்றும் பொருளாதாரச் சூழல், கல்வி முறை உள்ளிட்ட தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நடப்பு நிகழ்வுகள் குறித்த பரீட்சார்த்தியின் அறிவைச் பரீட்சிக்கும் ஒரு வினாத்தாள்.
பொது விவேகம்	பரீட்சார்த்தியின் பகுத்தறியும் திறனை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு வினாத்தாள்.

பரீட்சை மொழி மூலம்:

- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்
- பரீட்சார்த்திகள் தாங்கள் விரும்பும் ஏதேனும் ஒரு மொழியில் மட்டுமே பரீட்சைக்கு தோற்றலாம். அம் மொழி மூலமே தெரிவுக்கான மொழியாக கருதப்படும். (விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை மாற்ற பரீட்சார்த்திகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.)
- எல்லா பரீட்சார்த்திகளும் இரண்டு வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

4.1.2. கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு:

மதிப்பெண்கள் வழங்கப்படும் முக்கிய விடயங்கள்	*உச்சப் புள்ளிகள்*	*தெரிவு செய்வதற்குப் பரிசீலிக்கப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்*
மேலதிக கல்வித் தகைமைகள்	20	

மதிப்பெண்கள் வழங்கப்படும் முக்கிய விடயங்கள்	*உச்சப் புள்ளிகள்*	*தெரிவு செய்வதற்குப் பரிசீலிக்கப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்*
தொழில் பற்றிய அறிவு	20	60
இணைபாட விதான செயற்பாடுகள்	20	
சேவை அனுபவம்	10	
நேர்முகத் தேர்வில் வெளிப்படுத்தும் திறன்கள்	30	
	100	

குறிப்பு:

i. எழுத்து மூல பரீட்சையில் கலந்து கொண்ட அனைத்து விண்ணப்பதாரர்களிலிருந்தும், தகைமை பெற்றவர்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். ஒவ்வொரு வினாத்தாளிலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து, நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் அந்த எண்ணிக்கையில் 50% ஆகிய இரண்டின் கூட்டுதொகையான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வுக் குழுவிற்கு வழங்கப்படாது.

ii. ஆட்சேர்ப்பின் போது, மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, முக்கியப் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட அதிகபட்ச புள்ளிகளுக்குள், கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வுக்கான விரிவான புள்ளி திட்டத்தை ஆணைக்குழு அங்கீகரிக்கும்.

iii. எழுத்து மூல பரீட்சையில் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வில் பெற்ற புள்ளிகளின் மொத்தத்தில் மிக உயர்ந்த தகைமையைக் காட்டும் விண்ணப்பதாரர்கள், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

5. சேவையில் உள்ளீர்ப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:-

i. இந்த நியமனம், ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, 2026.09.01 ஆம் திகதியிட்ட 2504/07 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டது.

ii. இந்தப் பதவி நிரந்தரமானது. ஊழியர் சேம நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி நலன்கள் உரித்தானது.

iii. இந்த நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

iv. ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பணிக்கமர்த்தப்பட்ட 3 வருடங்களுக்குள் செயல்திறன் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

v. தகுதிகாண் காலத்தின் முடிவில், திருப்திகரமான பணி, வருகை, நடத்தை மற்றும் செயலாற்றுகை தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பணி நிரந்தரமாக்கப்படும்.

vi. ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின்படி, உங்கள் செயலாற்றுகை தரம் ஆண்டுதோறும் மதிப்பீடு செய்யப்படும். அதன்படி, எதிர்கால சம்பள உயர்வுகள் வழங்கப்படும், மேலும் அந்த செயலாற்றுகை தரம் பதவி உயர்வுகளுக்கும் பயன்படுத்தப்படும்.

vii. அரச கரும மொழி அல்லாத வேறு பயிற்று மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகள், தகுதிகாண் காலத்தில் அரச கரும மொழியில் பரிந்துரைக்கப்பட்ட தேர்ச்சியைப் பெற வேண்டும்.

viii. 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச்சட்டம், 2026.09.01 ஆம் திகதியிடப்பட்ட இல. 2504/07 வர்த்தமானி அறிவித்தலில் உள்ளீர்க்கப்பட்டுள்ள இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விதிகள், தாபன விதிக் கோவை பாகம் II, நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அவ்வப்போது வெளியிடப்படும் விதிகள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கு இந்த நியமனம், உட்பட்டது.

ix. பரீட்சையானது சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். பரீட்சார்தி, தாம் விரும்பும் ஏதேனும் ஒரு மொழியில் மட்டுமே பரீட்சையில் கலந்துகொள்ள வேண்டும்.

x. விண்ணப்பித்த மொழி மூலத்தை மாற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படாது. மேலும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழியே நியமனம் பெறத் தகுதியுடையவராக இருப்பீர்கள்.

6. விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :-

i. அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

ii. எழுத்து/கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் தங்களின் ஆளடையாளத்தை நிரூபிக்க, பின்வரும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

7. பரீட்சைக் கட்டணம் :- பரீட்சைக் கட்டணம் ரூபா: 1000.00 ஆகும். இந்தக் கட்டணத்தை, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளை கணக்கு இலக்கம் : 92603543 இற்கு செலுத்த வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எந்தக் காரணத்திற்காகவும் மீள திருப்பிக் கையளிக்கப்படாது. கட்டணம் செலுத்திய பிறகு பெறப்பட்ட பற்றுச்சீட்டை இந்த விண்ணப்பப் படிவத்தில் ஒட்டுதல் வேண்டும், மேலும் அதன் நகலை எதிர்காலப் பயன்பாட்டிற்காக வைத்துக்கொள்ளல் வேண்டும்.

8. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:

i. விண்ணப்பங்களை, பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, தபால் பெட்டி இல. 1431, 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு, 2026.11.16ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் அனுப்பதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவுடைய தாளில் தயாரித்து ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

iii. விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது மேல் மூலையில் “அலுவலக உதவியாளர் தரம் III - க்கான ஆட்சேர்ப்பு” எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் / சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு / முப்படையைச் சேர்ந்த ஆணை பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது அரச அல்லது மாகாணப் பொதுச் சேவையில் நிரந்தரப் பதவியில் இருந்து, மாதம் ரூபா. 71,240/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் ஒரு அதிகாரியால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

v. தபாலில் தொலைந்துவிட்டதாகவோ அல்லது தபாலில் தாமதமாகிய விண்ணப்பங்கள் குறித்த முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

vi. விண்ணப்பத்துடன் பின்வரும் ஒவ்வொரு ஆவணத்தினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றும் இணைக்கப்படல் வேண்டும், வேறு எந்த ஆவணங்களும் இணைக்கப்படக் கூடாது.

a) தேசிய அடையாள அட்டையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி
b) பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி
c) மேலே விண்ணப்பித்த அடிப்படை கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள்

d) சமீபத்திய 2 நன்னடத்தைச் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள்
e) பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு

குறிப்பு: விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை சரிபார்ப்பதற்காக, நேர்முகத்தேர்வின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. தவறான தகவல்களை வழங்குதல்.
ஆட்சேர்ப்புக்கு முன்னர் உங்கள் விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் தவறானது அல்லது பிழையானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் பரீட்சார்தி தகுதி ரத்து செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பிறகு அத்தகைய தவறான அல்லது பிழையான தகவல் கண்டறியப்பட்டால், தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு உங்களைப் பணியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புவது/நிரப்பாமல் விடுவது குறித்த இறுதி முடிவு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

11. ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முடிவே இறுதியானது.

12. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது வேறுபாடு இருப்பின், சிங்கள உரையே மேலோங்கும்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஆர்.எஸ்.ஏ. திசாநாயக்க,
பணிப்பாளர் நாயகம்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
தபால் பெட்டி இல : 1431,
36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2026.10.

(அலுவலக பாவணைக்கு மட்டும்)

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
அலுவலக உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை
விண்ணப்பப்படிவம் - 2026

மொழி

சிங்களம்	
தமிழ்	
ஆங்கிலம	

(விண்ணப்பப்படிவத்தை ஆங்கில பெரிய எழுத்துக்களில் நிரப்புதல் வேண்டும்)

1.0	1.1. முழுப் பெயர்	
	1.2. முழுப் பெயர் (சிங்களம் /தமிழ்)	
	1.3. முதலெழுத்துக்களுடன் பெயர்	
2.0	2.1. நிரந்தர முகவரி	
	2.2 கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி	

	2.3. மாவட்டம்	
	2.4. மாகாணம்	
3.0	3.1. பாலினம் ஆண்/பெண்	
	3.2. தேசிய அடையாள அட்டை இல.	
4.0	4.1. கையடக்க தொலைபேசி இல. வட்ஸ்அப்	
	(whatsapp) இல.	
	4.2. நிரந்தர தொலைபேசி இல.	
	4.3. மின்னஞ்சல் முகவரி	
5.0	5.1. பிறந்த திகதி	
	5.2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியில் வயது	வருடங்கள்: மாதம்: நாள்:
6.0	6.1. திருமணமானவர் /திருமணமாகாதவர்	
7.0	இனம்	
8.0	மதம்	

9.0 கல்வித் தகைமைகள்: மொழி மூலம்: .....

க. பொ. த. (சாதாரண தரம்) வருடம் : ..... பரீட்சை சுட்டெண்:			
பாடம்	தரம்	பாடம்	தரம்

10.0 தொழில் சார் தகைமைகள் :-

.....

.....

11.0 சேவை அனுபவம்:-

நிறுவனம்	காலம் (ஆண்டுகள்)

12.0 மேலதிக கல்வித்தகைமைகள்: (ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதிகளுக்கு அப்பாற்பட்ட கல்வித் தகைமைகள்):

பரீட்சையின் பெயர்	*பாடசாலை /நிறுவனம்*	*பெறுபேறு*
உ-ம் : க. பொ. த. (உயர் தரம்)		

13.0. இணைப்பாட விதான செயற்பாடுகள் :

14.0 வேறு தகைமைகள் :-

.....

.....

15.0 நீங்கள் எப்போதாவது ஏதாவது குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளீர்களா?

ஆம்	
இல்லை	

(ஆம் எனில், விவரமாக குறிப்பிடவும்)

.....
.....

16.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு விபரங்கள்:-

செலுத்திய கட்டணம் ..... திகதி .....
(பற்றுச் சீட்டு கலறாதவாறு இங்கு உட்டவும்.)

17.0 விண்ணப்பதாரரின் உறுதிமொழி:

இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள், எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன். ஆட்சேர்ப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் ஒன்று தவறானது அல்லது துல்லியமற்றது எனக் கண்டறியப்பட்டால், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு எனது பரீட்சார்தி தகுதியை/அல்லது நியமனத்தை ரத்து செய்யும் உரிமையைக் கொண்டுள்ளது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக் கட்டுப்படவும், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி நான் தகுதியற்றவன் எனக் கண்டறியப்பட்டால், ஆட்சேர்ப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ எனது பரீட்சார்தி தகுதியை/அல்லது நியமனத்தை ரத்து செய்ய எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் உட்படுவதற்கும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

.....
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:.....

18. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

இந்த விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் திரு./திருமதி./செல்வி .....
, என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், ... அன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்றும் இதன்மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

.....
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் அலுவலக முத்திரை

கையொப்பத்தைச் உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :-.....
.....
பதவி :-.....
முகவரி :-.....
திகதி :-.....

10 - 656/2